# களத்தில்

ஒரு பலம்வாய்ந்த சர்வதேச சக்தியாக அணிதிரண்டு, எமது மக்களின் விடிவுக்காக உலகத் தமிழினம் உரிமைக் குரல் எழுப்ப வேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (22.04. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (159) அன்பளிப்பு: 60 p




தாய்நிலம் குளிரும்..... தாகமும் தணியும் !

## மனித உரிமை ஆணைக்குழு நடைபெறுகையிலேயே ஒன்பது தமிழர்கள் காணாமல் போயுள்ளனர்

ஜெனிவாவில் மனித உரிமை ஆணைக்குழு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் கூட யாழ்குடா நாட்டில் ஒன்பது தமிழ்ப் பொதுமக்கள் சிறீலங்கா படையினரால் காணமல் போயுள்ள திடுக்கிடும் தகவலை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர். கடந்த மாதத்தில் எட்டுப் பேரும் இம்மாதத்தில் ஒரு வரும் சிறீலங்கா இராணு வத்தால் காணமல் போயுள்ளனர் எனத் தெரிவித்துள்ள விடுதலைப் புலிகள் அவர்களின் பெயர் விபரங்களையும் வெளி யிட்டுள்ளனர். அதே நேரம் தமிழீழமெங்கும் சுற்றி வளைப்பு க்களும் கைதுகளும் நீதி விசாரணையின்றி தடுத்து வைத்தல்களும் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துக் காணப்படுகிறது. கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி மட்டக்களப்பில் அன்னமலை என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்த படையினர் புது வருடத்திற்கு என தமது வீடுகளுக்கு சென்ற 38 தமிழ் இளைஞர்களை கைதாக்கிச் சென்றுள்ளனர். அவர்கள் கிராமத்திற்கு வந்ததை அதிர டிப்படையினருக்கு அறிவிக்க வில்லை எனச் சாட்டுக் கூறப்பட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் மட்டுமல்லாது கொழும்பு உட்பட தீவு முழு வதும் தமிழர்கள் சிங்களப் படையினரால் காரணமின்றி

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## திம்புப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்
## படை விலக்கப்பட்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்

# ஜெனிவா ஐ.நா. மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் 54 அரச சார்பற்ற அமைப்புக்கள் கூட்டறிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்,1997ம் ஆண்டு தேசிய மாவீரர் நாளன்று தமிழ் மக்களுக்கு விடுத்த செய்தியில் திம்புப் பேச்சுவார்த்தையின் அடிப் படையிலேயே அரசியல் தீர்வு காண முடியும் எனக் குறிப் பிட்டிருந்ததைக் குறிப்பிட்டு அவ் அறிக்கையின் அடிப் படையிலேயே பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி 54 அரச சார்பற்ற நிறுவனங்கள் , ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமை ஆணைக்குழுவின் 54வது கூட்டத் தொடரில் கூட்ட றிக்கை ஒன்றை சமர்ப்பித்து ள்ளனர்.

மேலும் தனது படைகளை திருப்பி அழைக்க சிறீ லங்காவை வலியுறுத்த வேண் டும் எனவும், சிறீலங்கா தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் காண வேண்டுமெனக் கேட்கப்பட வேண்டுமெனவும் அக் கூட்டறிக்கை ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவைக் கோரியுள்ளது.

சிறீலங்காப் படையினரால் தமிழ்மக்கள் கொல்லப்படுவது, பாலியல் வன்முறைக்குள்ளாவது மற்றும் பொருளாதாரத்தடைகள்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## சிறீலங்காவின் யுத்த ஆயத்தங்கள் தொடர்கிறது

✳ ஆளணி பற்றாக்குறையைப் போக்க ஊர்காவற் படை இராணுவமாக மாற்றப்படுகிறது

✳ பாக்கிஸ்தான்-சீனாவுடன் நவீன யுத்தக் கடற்கலன்களைப் பெற சிறிலங்கா பேச்சுக்கள்

சிறீலங்காப் படையினர் அடை ந்து வரும் இராணுவத் தோல்விகளின் வெளிப்பாடாகப் பெருந்தொகையான இராணுவ த்தினர் கொல்லப்பட்டும் தலை மறைவாகி ஓடிவருவதும் காரணமாக சிறீலங்கா இராணு வம் ஆளணிப் பற்றாக் குறைக்குள் சிக்குண்டு தள்ளா டுகிறது. இதனை ஈடுசெய்யும் வகையில் 7000 சிங்கள ஊர்க்காவற் படையினருக்கு இராணுவப்பயிற்சிகளும் ஆயுதப் பயிற்சிகளும் துரிதகெதியில் அளிக்கப்பட்டு வருவதாக சிறீலங்கா இராணுவ வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பயிற்சிகள் முடிந்தவுடன் இவர்கள் கிழக்கில் உள்ள இராணுவத்தினரின் இடத்திற்கு அனுப்பப்பட உள்ளதாகவும் அங்குள்ள இராணுவத்தினர் ஜெயசிக்குறு யுத்தமுனைக்கு விரைந்தனுப்பப் படவுள்ள தாகவும் சிறீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆயினும் இது கிழக்கை முற்றிலும் விடுதலைப் புலிகளிடம் இழப்பதற்கு

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## தமிழீழம் எங்கும் அதிகரிக்கும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள்

✳ **திருமலை மாவட்டத்தில்**

ஏப்ரல் 14ம் திகதி மதியம் 1.30 மணியளவில் மூதூர் பச்சனூருக்கு அண்மையில் உள்ள 64வது பொலிஸ் நிலையம் தமிழீழ விடுதலைப் புலி களினால் தாக்கியழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் ஒரு அதி காரியும் மூன்று பொலிசாரும் கொல்லப்பட்டுள்ளனர். இத் தாக்குதலின் பொழுது மீட்புப் பணிக்கென உதவிக்கு விரைந்த பச்சனூர் - சாளியனூர் பொலிசார் மீதும் விடுதலைப் புலிகள் நடாத்திய

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# சிறீலங்காவின் தமிழினக் கொடுமைகளுக்கெதிராக தென்னாபிரிக்காவில் தமிழர் ஆர்ப்பாட்டம்

## மனுவை கிரிக்கெட் சபை தலைமை இயக்குனர் நேரடியாகக் கையேற்றார்

தென்னாபிரிக்காவில் ஏப்ரல் 5ம் திகதி ஜோகனஸ்பேர்க் நகர மைதானத்தில் சிறீலங்கா கிரிக்கெட் அணிக்கும் தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிக்கும் இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டம் இடம் பெற்றது. இப்போட்டி நடைபெற்ற மைதானத்திற்கு முன்பாக தமிழர்கள் நூற்றுக் கணக்கில் ஒன்று திரண்டு சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக செய்து வரும் இனஅழிப்பு நோக்கிலான கொடுமைகளை வெளிப்படுத்தும் வகையில் ஆர்ப்பார்ட்டம் நடாத்தினர்.

போட்டியைக் காணவென அங்கு திரண்ட பல்லாயிரக் கணக்கான மக்களின் கவனத்தைக் கவரக்கூடிய வகையில் இடம்பெற்ற தமிழ்மக்களின் இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்தில் குழந்தைகள் பெண்கள் உட்பட எல்லா வயதையும் எல்லா நிலையையும் சார்ந்த தமிழ் மக்கள் ஆத்மார்த்த ரீதியான ஈடுபாட்டுடன் பங்குபற்றி தமிழீழ உடன்பிறப்புக்கள் சிறீலங்காவால் வதைக்கப்படும் துயரநிலையை கோஷங்கள் எழுப்பியும் பதாகைகள் தாங்கியும் உலகுக்கு எடுத்து விளக்கினர்.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவையையும் அதற்கு தமிழ் மக்கள் வழங்கும் பேராதரவையும் தமிழர்கள் உறுதியுடனும் தெளிவுடனும் உலக சமுதாயத்திற்கு வெளிப்படுத்தி நின்றனர்.

தமிழீழ ஆதரவாளர் அமைப்பு, சிறீலங்கா அடக்குமுறை எதிர்ப்பு மக்கள் இயக்கம், நீதிக்கும் சமாதானத்திற்குமான திராவிடர் அமைப்பு, சிறீலங்காவின் அடக்கு முறைக்கெதிரான இயக்கம் ஆகிய நான்கு அமைப்புக்கள் இணைந்து நடாத்திய இவ்வார்ப்பாட்டம் கண்டவர் நெஞ்சில் சிந்தனை அலைகளை எழுப்பித் தமிழீழ மக்களின் உண்மைநிலையை உணர பேருதவியாக அமைந்தது.

இவ்வமைப்புக்களால் கூட்டாகத் தயாரிக்கப்பட்ட மனுவை ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு நேரடியாகவே வந்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் தலைமை இயக்குனர் பெற்றுக் கொண்டமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. ✳

## சிறீலங்காவின் யுத்த ஆயத்தங்கள்......

வழிசமைத்து விடும் எனும் பலத்த அச்சம் களநிலை தெரிந்த சிறீலங்கா அதிகாரிகளிடம் தலை தூக்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் சிறீலங்கா கடற்படையை நவீனப்படுத்தும் நோக்கில் சீனாவிடம் இருந்து மூன்று அதிவேக தாக்குதல் கப்பல்களை வாங்கும் பேச்சுவார்த்தைகளை சிறீலங்கா முடித்துள்ளதாகவும் இன்னும் சில மாதங்களில் இச்சீன அதிவேக தாக்குதல் கப்பல் சிறீலங்கா கடற்படையி இணைந்து கொள் விருப்பதாகவும் கொழும்ப செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே நேரத்தில் பாக்கி தானிடம் இருந்து ரோந்து படகுகளை கொள்வன செய்வதற்கான பேச்சுக்களி சிறீலங்காவின் உயர்மட்டக்கு பாக்கிஸ்தானில் தங்கியிருந் பேச்சுக்களை நடாத் வருகின்றன. ✳

## மனித உரிமை ஆணைக்குழு நடைபெறுகையிலேயே......

கைதாக்கப்படுவது அதிகரித்துக் காணப்படுகிறது. கடந்த சில தினங்களில் மட்டும் கொழும்பையும் அதனைச் சுற்றிய பகுதிகளிலும் தேவையான சகல ஆவணங்களையும வைத்திருந்த 52 தமிழர்கள கைது செய்யப்பட்டுக்கொண்டு செல்லப்பட்டிருப்பதாக செய திகள் தெரிவிக்கின்றன. ✳

## திம்புப்பேச்சுவார்த்தையின் அடிப்படையில்........

என்பவற்றை இக்கூட்டறிக்கை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இக் கூட்டத்தொடரில் சமாதானத்துக்கும் விடுதலைக்குமான சர்வதேசப் பிரதிநிதி 1997ல் சிறீலங்காவிலேயே ஆகக்கூடுதலான மக்கள் காணாமல் போயுள்ளதை ஐக்கிய நாடுகள் சபையின் காணாமல் போவோருக்கான மனித உரிமைகள் பிரிவு தெரிவித்திருந்தமையை மீள நினைவுபடுத்தியதுடன், வடக்கு கிழக்கில் பெண்கள் சிறீலங்கா படையினரால் பாலியல் வன்முறைக்குள்ளாகும் கொடுமையைக் கண்டித்துப் பேசியுள்ளார்.

ஆசியன் கலாச்சார முன்னேற்ற அமைப்பு, சிறீலங்காவில் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தது.

சர்வதேச கல்வி அபிவிருத்தி நிறுவனம் சிறீலங்காவின் இனத்துவேசக் கொள்கையே, தொடரும் இனக் கலவரங்களுக்கும் தமிழினப் படுகொலைகளுக்கும் காரணம் எனக் கண்டித்துள்ளது. கடந்த 15 வருட காலப் போரில் கோவில்கள் தேவாலயங்கள் என ஆயிரத்தி அறுநூறுக்கும் மேற்பட்ட தமிழரின் வ்ணக்கத்தலங்கள் நாசமாக்கப்பட்டுள்ளதாகவும் இவ் அமைப்பு மேலும் சிறீலங்காவைக் குற்றம் சாட்டியுள்ளது.

தமிழர் மனித உரிமைகள் மையத்தினால் சிறீலங்காவின் மனித உரிமை "வன்முறைகளை விளக்கும் அறிக்கை இங்கு வெளியிடப்பட்டது.

இதே வேளை சர்வதேச மன்னிப்புச் சபை, சிறீலங்கா அரசு மீது நிர்ப்பந்திக்க வேண்டிய விடயங்கள் குறித்து சில சிபார்சுகளை முன்வைத்தது. சிறீலங்கா அரசின் உண்மைக்கு மாறான வாக்குறுதிகளைச் சாடிய சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை மீறல்களைக் குறைப்பதற்கு ஆவன செய்யப்படும் என முன்னர் சிறீலங்கா கூறிய போதிலும் இவ்வாக்குறுதிகள் மீறப்பட்டதைச் சுட்டிக்காட்டி, இது குறித்த விடயத்தை சிறீலங்கா அரசு நடைமுறைப்படுத்துவதற்கு ஆணைக்குழு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டது. ✳

## தமிழீழம் எங்கும் அதிகரிக்கும்......

தாக்குதல்களில் இரு பொலிசார் காயமடைந்துள்ளனர் என தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. இத்தாக்குதலின் பொழுது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் பட்டியலையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் 11ம் திகதி சனிக்கிழமை இரவு திருகோணமலை குச்சவெளி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்ட பொழுது ஒரு அதிகாரி கொல்லப்பட்டதாகவும் ஏனையவர்கள் தப்பி ஓடியதாகவும் ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் வசமாகியதாகவும் திருகோணமலைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

### யாழ்குடா நாட்டில்

ஏப்ரல் 16ம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் வறணி வாழைத் தோட்டம் பகுதியில் சிறீலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய மோட்டார் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட பலர் காயமடைந்துள்ளனர்.

இதையடுத்து இரவு 7.55 மணியளவில் விடுதலைப் புலிகள் கொடிகாமம் மிருசுவில் பகுதியில் சிங்கள படையினரின் முன்னணிக் காவல் அரண்கள் மீது நடாத்திய தாக்குதல்களில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட பலர் காயமடைந்துள்ளனர். இழப்புக்கள் ஏதுமின்றி விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு சென்றுள்ளனர்.

ஏப்ரல் 11ம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணியள்வில் மீசாலை கண்டி வீதி இராணுவ முகாமும் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்த பொழுதிலும் சேதவிபரங்கள் இப்பத்திரிகை அச்சுக்கு போகும் வரை கிடைக்கப் பெறவில்லை.

இத்தாக்குதல் நடைபெற்ற நள்ளிரவு பூளைப்பகுதியிலுள்ள சிங்களப்படைகளின் பதுங்கு குழிகள், காவலர்ண்கள் மீதும் விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

ஏப்ரல் 16ம் திகதி மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமிலிருந்து சந்திவெளி நோக்கி இரவு ரோந்துக்குப் புறப்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு இராணுவ அதிகாரி கொல்லப்பட ஐந்து இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்லடியில் இருந்து ஏப்ரல் 12ம் திகதி ஞாயிறு புதுக்குடியிருப்பு நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளின் சிறுத்தைப் படையணி நடாத்திய வெற்றிகரமான தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் ஓடித் தப்பித்துக் கொண்டனர். இராணுவத்தினரது ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக்கொண்டு எவ்வித இழப்புகளுமின்றி இருப்புகளுக்குத் திரும்பியதாக தெரிகிறது.

இதே தினம் வாழைச்சேனை பேய்த்தளைப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒரு சிறீலங்கா இராணுவத்தினன் படுகாயமடைந்தான்.

### வவுனியா மாவட்டத்தில்

வவுனியாவுக்குத் தெற்கே உள்ள அவரந்தலாவையில் ஏப்ரல் 12ம் திகதி ஞாயிறு காலை 7.45 மணியளவில் வீதித்தடைகளை அகற்றி ரோந்து சென்று கொண்டிருந்த சிங்கள இராணுவ– ஊர்காவல் கூட்டுப் படை மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு பொலிசாரும் ஒரு ஊர்க்காவற் படையினனும் கொல்லப்பட்டனர்.

ஓலுவ மடுவில் பதுங்கு குழிகளை அமைத்துக் கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலில் ஒரு இராணுவத்தினன் கொல்லப்பட நால்வர் படுகாயமடைந்தனர். ✳

# குண்டுபட்ட குழந்தை காலதாமதத்தினால் உயிர் இழந்தது

வாழைச் சேனையில் சந்திரிகா படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு காளியப்பன்பிள்ளை புஷ்பநாதன் என்ற ஒன்பது வயதுச் சிறுவன் இலக்காகி உள்ளான். உயிருடன் போராடிய சிறுவனைத் தூக்கிக் கொண்டு மட்டு நகர் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியில் இராணுவச் சோதனைகளைத் தாண்டிச் செல்வதில் மூன்று மணி நேரம் ஏற்பட்ட தாமதத்தினால் மேற்படி பாலகன் பரிதாபமாக உயிர் இழந்தான்.

இதே போன்று 36 வயதான செபஸ்தியான் புஸ்பராணி என்ற தாயும் அவர் மகள் 12 வயது சிவாஜினியும் இராணுவத்தால் சுடப்பட்ட பின்னர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகையில் சோதனைச் சாவடிகளில் படையினர் ஏற்படுத்திய தடைகளால் எட்டு மணி நேரம் காலதாமதமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரத்தம் வெளியேறி அநியாயமாகச் சாவெய்தினர். ✳



## சர்வதேச பிரச்சனை

இலங்கைத் தீவில் தமிழ்மக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தமது வடக்கு கிழக்குத் தாயகத்தில் அமைதியுடன் வாழ்ந்து வந்தவர்கள். இவர்களது அமைதி வாழ்வு காலனித்துவத்தால் குழப்பப்பட்டது. காலனித்துவத்திலிருந்து விடுதலை பெறுவதின் மூலம் தமிழர்கள் தங்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வை மீளவும் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் அதற்கு எதிராகப் போராடினர். ஆனால், காலனித்துவ ஆட்சியாளரான பிரித்தானியர் சிருஷ்டித்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்துடனான ஒற்றையாட்சி பாராளுமன்ற ஆட்சி முறைமை – அவர்கள் எதிர்பார்த்த ஜனநாயக ஆட்சியை தமிழர்களுக்கு கொடுக்கவில்லை – என்பதை பிரித்தானியாவினால் அமுலாக்கப்பட்ட அரசியல் அமைப்பு முறையின் தந்தையான சோல்பரி பிரபு அவர்களே பகிரங்கமாக தெரிவித்தமை வரலாறு. இவைகளின் பின்னணியில் பார்க்கும் பொழுது, தமிழர் பிரச்சினையின் ஆரம்பமே சர்வதேசத் தொடர்புடையதாக அமைகிறது. ,

அடுத்து, காலனித்துவ விலகலின் பின்னர் சிங்களத் தலைமைகள் தமிழர்களுடன் காலனித்துவ விலகலில் இணைந்து செயலாற்றுவதற்குத் தாம் அளித்த வாக்குறுதிகளை மீறி சிங்கள – தமிழ் தலைமைகளுக்கு இடையிலான தொடர்புகளை ஆண்டான் – அடிமை உறவாகப் பேண முற்பட்டமை வரலாறாகியது. இவ்வாறாக, காலனித்துவம் அளித்த பெரும்பான்மையை சிங்களவர், தமிழர்களை அவர்களது தாயகத்திலேயே இரண்டாந்தர பிரஜையாகவோ நாடற்றவர்களாகவோ மாற்றுவதற்கான அரசியல் அதிகாரமாகப் பயன்படுத்தத் தொடங்கியதும் தமிழர்கள் தமது தாயக உரிமையை வெளிப்படுத்துவதற்கான தேசியவாத முயற்சிகளில் காலனித்துவம் விலகிய அடுத்த ஆண்டிலேயே ஈடுபடத் தொடங்கினர். இதனால், தமிழர்களின் அரசியல் பணிவை சட்டவாக்கங்கள் மூலம் வலுக்கட்டாயமாக பெறுவதற்கான அமைப்பாக இலங்கை பாராளுமன்றத்தை சிங்கள – பௌத்த பேரினவாதிகள் கையாளத் தொடங்கினர்.

இதன் வழியாக தமிழர்களின் ஜனநாயக ரீதியான பங்களிப்புக்களை மறுத்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தமிழர்களின் ஜனநாயக ரீதியான எதிர்ப்புக்களை–போராட்டங்களை எல்லாம் அலட்சியப்படுத்தியதும் அல்லாமல், தமிழ் மக்களின் எழுச்சியை ஆயுதபடைபலம் கொண்டு ஒடுக்கி ஒரு நவ காலனித்துவத்தை இலங்கைத் தீவில் நிறுவிக் கொண்டனர். நவகாலனித்துவம் சர்வதேச சட்டங்களினால் தடைசெய்யப்பட்ட குற்றம். அதனை எதிர்த்துப் போராடுவதற்கான சக்தியாகத்தான் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு முன்வைக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனங்களால் உறுதிப்படுத்தப்பட்டது. இதற்கேற்ப, 1972ம் ஆண்டில் சிறீலங்கா என்ற தன்னிச்சையான அந்நிய அரசொன்றை சிங்கள – பௌத்த பேரினவாதம் தமிழர்கள் மேல் திணித்தபோது, பிரித்தானிய காலனித்துவம் தமிழ்– சிங்கள தேச இனங்கள் ஜனநாயக ஆட்சியில் பங்கேற்பதற்கு விதித்த 29(2) அரசியலமைப்பு நிபந்தனையை வன்முறைப்படுத்தி பிரித்தானியா உருவாக்கிய பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியை விட்டு விலகிச் சென்றனர். இதனால், நாடற்ற தேச இனமாக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்கள் வரலாற்றுத் தாயகமான தமிழீழத் தாயகத்தை மீள அமைக்கத் தீர்மானித்து அதனை 1977 தேர்தலைக் குடியொப்பமாக மாற்றி அங்கீகரித்ததின் மூலம் சிறீலங்கா என்ற அந்நிய அரசிலிருந்து விலகி தமக்கான தமிழீழ அரசை நேரடி நடவடிக்கைகளாலோ அல்லது போராட்டத்தினாலோ நிறுவப் போவதாக சிங்கள அரசுக்கும் உலகிற்கும் பிரகடனப்படுத்தினர். அந்நேரம் முதல் தமிழர் பிரச்சினை சர்வதேச மத்தியத்தத்துடன் கூடிய தீர்வுக்குரிய பிரச்சினையாக மாற்றப்பட்டது. இது திம்பு பேச்சுக்களுக்கு சிறீலங்காவும் இணங்கி பேச்சுக்களில் கலந்து கொண்டதின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, சிறீலங்கா தமிழர்களின் பிரச்சினையை இனஅழிப்பு மூலமும் தமிழர் தாயகத்தின் உட்கட்டுமானங்களை உருக்குலைப்பதன் மூலமும் உலகுக்கு எடுத்துக்காட்டி வருவதினால் தமிழர் பிரச்சினையினை சர்வதேசப் பிரச்சினையாக அணுகவேண்டிய நிலையினைத் தோற்றுவித்துள்ளது.

இது உணவை மருந்தை ஆயுதமாகப் பயன்படுத்தல் மனிதாயத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்தக்குற்றங்கள் போன்ற சிறிலங்கரவின் செயற்பாடுகளினால் – சர்வதேச சமூகத்தின் தலைமீட்டினால் – தமிழர் பிரச்சினை மட்டுமல்ல தமிழர்களின் வாழும் நிலைகளும் பேணப்பட வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது. மேலும், சிறீலங்கா சமாதானத்தீர்வுக்கான அக்கறை காட்டுவது போல் உலகுக்கு காட்டிக் கொண்டு –சமாதான தீர்வுக்கான அடிப்படை தேவையான "மக்கள் மீது ஆக்கிரமிப்பற்ற நிலை" என்பதற்கு பாதகத்தை தோற்றுவிக்க கூடிய வகையில் மக்கள் குடியிருப்புக்கள் ஊர்மனைகள் எங்கும் தனது படைகளைக் குவித்து அப்பட்டமான ஆக்கிரமிப்பை நடாத்திக் கொண்டிருக்கிறது. இந்த படைகள் விலகுவதற்கு சர்வதேச அழுத்தங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் சிறீலங்கா விடுதலைப் புலிகளிடம் அடையும் இராணுவத் தோல்விகளை தங்களது ஆக்கிரமிப்பின் பெறுதிகள் எனக் கருதாது இலங்கைத் தீவை சர்வதேச சந்தை போக்குகளுக்கும் இராணுவ நலன்களுக்கும் களமாக மாற்றி இராணுவத் தீர்வால் தமிழர்களை ஒடுக்கி விட பகற்கனவு காண்கிறது. இதன் விளைவாக தென்னாசியாவினதும் உலகினதும் அமைதிக்கும் பாதுகாப்புக்குமான அச்சுறுத்தல்கள் தோன்றக்கூடிய சாத்தியக் கூறுகள் வளர்ச்சி பெற்று வருகின்றன.

இவைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துப் பார்க்கையில் தமிழர் பிரச்சினை சர்வதேச பிரச்சினையாகக் கருதப்பட்டு அவர்களது சுயநிர்ணய உரிமை உடன் அங்கீகரிக்கப்பட்டு மக்கள் குடியிருப்புக்களில் நிலை கொண்டுள்ள படைகள் விலக்கப்பட்டு அவர்களது அரசியல் தலைமையான தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மூன்றாம் தரப்பு மத்தியத்துடனான பேச்சுவார்த்தையை சிறீலங்கா தொடங்க புலம்பெயர் தமிழர்களாகிய நாம் ஆவன செய்யவேண்டும். ✳

# சிறிலங்கா அரசின் கலைந்த கனவுகள்

"யாழ்நகரைப் பிடித்துவிட்டால் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விடுவார்கள், தமிழ் மக்களும் அவர்களை தூக்கி எறிந்து விடுவார்கள் என சந்திரிகா அரசு கனவு கண்டது. ஆனால், நிலைமையோ வேறு விதமானதாக அமைந்துள்ளது". இவ்வாறு சந்திரிகா அரசின் கனவுகள் கலைந்து போனதைப்பற்றி குறிப்பிடுகின்றார் முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக. யாழ்நகரைக் கைப்பற்றுவதோ அன்றி வடக்கு கிழக்கில் உள்ள வேறு ஒரு நகர் ஒன்றைக் கைப்பற்றுவதோ இனப் பிரச்சனைக்கு தீர்வாகமாட்டாது என்பது ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதொன்றுதான். ஏனெனில், ஒரு தேசிய இனப்பிரச்சனை என்பது நகரங்களில் உள்ள கட்டிடங்களிலோ அன்றி வீதிகளிலோ தங்கி இருக்கவில்லை. தேசியம் என்பது மக்களின் உணர்வுகளில் உள்ளது. அவர்களின் உரிமைகள் உடமைகள் பறிக்கப்படும் போது அது தீவிரமாக கிளர்ந்தெழுமேயொழிய அடங்கிப் போகமாட்டாது. ஆனால், சந்திரிகா அரசோ அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

யாழ்குடாநாடு விடுதலைப் போராட்டத்தின் மையப்பகுதி எனவும் அதனை நசுக்கிவிடுவதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழர்களின் தேசிய உணர்வையும் அழித்துவிடலாம் என்றே கனவு கண்டது. அத்தோடு விடுதலைப் புலிகளை தமிழ் மக்களிடம் இருந்து பிரித்துவிடலாம் எனவும் எண்ணியது. ஆனால், ஆரம்பம் முதலே அரசின் இக்குறிக்கோள் நிறைவேறாதென எச்சரிக்கப்பட்டது. அதாவது, யாழ் குடாநாட்டின் மீது சிறீலங்கா அரசு படையெடுப்பது இனப்பிரச்சனைக்கு தீர்வாகப் போவதில்லை என்பது மட்டுமல்ல, பிரச்சனையை மேலும் சிக்கலாக்கவும் அதேசமயம் போரை மேலும் பரந்துபட்டதாகவும், விரிவாகவும் மாற்றுவதற்கும் அது உடந்தையாகவே இருக்கும் என்று கூறப்பட்டது.

சந்திரிகா அரசோ இவற்றைக் கருத்திற் கொள்வதாக இல்லை. யாழ்குடாநாட்டின் மீது படையெடுத்து யாழ்நகரைக் கைப்பற்றியது. இப்படையெடுப்பின் போது புலிகள் தந்திரோபாய ரீதியாக மட்டுமே போரிட்டதுடன் நின்று கொண்டனர். ஆனால், அரசோ போரில் பெரும்பகுதி முடிந்துவிட்டதெனவும், விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் எனவும் தெரிவித்ததோடு, தமிழ் மக்களும் புலிகள் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் பெரும் பிரச்சாரம் மேற்கொண்டது.

ஆனால், உண்மையில் யாழ்குடாநாட்டின் மீது படையெடுத்தமையானது, விடுதலைப் புலிகளை பெரும் தற்காப்பு போரிலிருந்து தாக்குதல் போரிற்கு திசைதிருப்பி விட்டதெனலாம். இதன் வெளிப்பாடு, இலங்கையில் பல பாகங்களிலும் வெளிப்படுத்தப்பட்டது என்றே கூறலாம். அத்தோடு, விடுதலைப் புலிகள் ஓர் மரபுவழி இராணுவத்திற்குரிய பண்புகளை பெற்றுக்கொள்ளவும் இது வாய்ப்பாகியது.

இந்த நிலையில்தான் சந்திரிகா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போர் என பிரச்சாரப் படுத்தியவாறு ஜெயசிக்குறு நடவடிக்கையை ஆரம்பித்தது. ஆனால், இந்நடவடிக்கை பதினொரு மாதங்களின் பின்பும் இடைநடுவில் நிற்கின்றது. அதாவது, விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கும் இறுதிக் கட்டம் நெருங்கிவிட்டதெனக் கனவு கண்ட சிறீலங்கா அரசின் கனவை விடுதலைப் புலிகள் கலைத்துவிட்டனர். ஒருபுறம் ஜெயசிக்குறுவை இலகுவாக

தொடர்ச்சி 15 ம் பக்கம்.....

> ஒரு தேசிய இனப்பிரச்சனை என்பது நகரங்களில் உள்ள கட்டிடங்களிலோ அன்றி வீதிகளிலோ தங்கி இருக்கவில்லை. தேசியம் என்பது மக்களின் உணர்வுகளில் உள்ளது. அவர்களின் உரிமைகள் உடமைகள் பறிக்கப்படும் போது அது தீவிரமாக கிளர்ந்தெழுமேயொழிய அடங்கிப் போகமாட்டாது.

> யாழ்குடாநாட்டின் மீது சிறீலங்கா அரசு படையெடுப்பது இனப்பிரச்சனைக்கு தீர்வாகப் போவதில்லை என்பது மட்டுமல்ல, பிரச்சனையை மேலும் சிக்கலாக்கவும் போரை மேலும் பரந்துபட்டதாகவும், விரிவாகவும், மாற்றுவதற்கும் அது உடந்தையாகவே இருக்கும் என்று அன்றே கூறப்பட்டது. சந்திரிகா அரசு பகற் கனவு கண்டவாறே நடவடிக்கையை ஆரம்பித்தது.

# ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையால் சிறீலங்கா கிழக்கில் பெரும்பகுதியை இழந்துவிட்டது

## ✳ வியட்னாம் போர் பாணியில் கிராமங்கள் இராணுவ வலயங்களாக்கப்படுகின்றன
## ✳ மீண்டும் 2ம் உலக போர் சைபீரியா வதை முகாங்களாக வவனியா முகாங்கள் காட்சியளிக்கின்றன

"அமெரிக்கா, வியட்னாம் போரில் நடந்து கொண்டதைப்போல் சிறீலங்கா இராணுவம், யாழ். குடாநாட்டில் கிராமங்களைத் தனிமைப்படுத்தி இராணுவ வலயங்களாக்கிக் கொண்டிருக்கிறது. விவசாயம், மீன்பிடி என்பவற்றுடன் சந்தோசமான வாழ்வும் கலையும் மனித அபிலாசைகளும் நிறைந்து உயிர்த்துடிப்புடன் திகழ்ந்த கிராமங்கள் எல்லாம் திட்டமிட்டு அழிக்கப்பட்டு கற்கும்பல்களாக காட்சியளிக்கின்றன.

உடைந்த வீடுகளுக்குள் புதர்களும் பச்சைச் செடிகொடிகளும் மண்டிக் காட்சியளிக்கின்றன.

அதேவேளை, இராணுவக் கெடுபிடிகளுக்குள் வாழும் தமிழ் மக்கள் சந்தேகத்துக்கு உரியவர்கள் ஆக்கப்பட்டும், சமூக வாழ்வுமுறைகள் அற்றும் ஜனநாயகம் என்பதை எண்ணிக் கூட பார்க்க முடியாத அவல வாழ்வில் துடிக்கின்றனர். சூழல் திட்டமிட்ட வகையில் மாசுபடுத்தப்படுகிறது. பனை, தென்னை மற்றும் கனி கொடுக்கும் மரங்கள் எல்லாம் பல்லாயிரக்கணக்கில் தறித்து வீழ்த்தப்பட்டுள்ளன. இருப்பிடங்கள், வீட்டுத் தளபாடங்கள் ஆகியவற்றுக்கு தேவையான மரத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ். நகரை நோக்கி செய்யப்படும் பயணம் என்பது மனித மாண்பையும் மனிதத்துவத்தையும் இழிவுபடுத்தும் பயணமாக உள்ளது. ஒவ்வொரு நூறு மீற்றருக்கும் இராணுவச் சோதனைச் சாவடிகள். 'காணாமல் போனோர்' என்ற பட்டியலில் முடியக்கூடிய அபாயப் பயணங்கள்.

வன்னி இன்று யுத்தக்களரியாக காட்சியளிக்கிறது. அங்கு இடம்பெயர்ந்து வாழும் ஐநூறாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுடைய அத்தியாவசிய தேவைகள் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வவனியாவினூடாக வன்னிக்குச் செல்பவர்களும் அங்கிருந்து வெளியில் வருபவர்களும் வவனியாவில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் அடைக்கப்படுகின்றனர்.

இவைக்ள் இரண்டாம் உலக போரில் சைபீரியாவில் இருந்த வதை முகாங்களைப் போன்றது.

இம் முகாங்களில் நீண்ட காலம் மக்களைத் தாமதிக்க வைப்பதும் அத்தியாவசிய தேவைகளை மறுப்பதும் பலரை தற்கொலைக்கு இட்டுச் சென்றுள்ளது. இந்த தற்கொலை மனோபாவம் இங்கு தொடர்கதையாக வளர்க்கப்பட்டுக் கொண்டே வருகிறது. வவனியா நகரம் அங்கிருக்கும் இரு குழுக்களுக்குள் அகப்பட்டு பயங்கரத்துக்குள்ளும் குண்டு வெடிப்புகளுக்குள்ளும் சிக்கித் தவிக்கின்றது.

இன்று கிழக்கில் நகரங்கள் அநேகமாக பகலில் சிறீலங்கா இராணுவத்தின் பிடியிலும் மிகுதியான பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும் உள்ளது. ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையால் கிழக்கு மாகாணத்தில் பெரும்பகுதியை சிறீலங்கா அரசு இழந்துவிட்டது. இங்கும் மக்களின் சமூக – பொருளாதார வாழ்வு, வடபுல மக்களது போலவே பரிதாப நிலைக்கு சிறீலங்காவால் தள்ளப்பட்டுள்ளது.

கொழும்பில் கூட தமிழர்களின் நிலை, தொடர்புசாதனங்களில் வரும் செய்திகளுக்கு முற்றிலும் முரண்பாடானதாகவே உள்ளது. பாதுகாப்பென்ற போர்வையில் தமிழர்கள் வீதிகளிலும் வீடுகளிலும் மிகக் கேவ்லப்படுத்தப்படுகின்றனர். அவர்கள் 'பயங்கரவாதிகள்', 'ஆபத்தானவர்கள்' 'எதிரி'களெனக் கருதப்படுகின்றனர். ஒருநாள் கூட பதியப்படாத முகவரியில் தமிழர்கள் தங்கமுடியாத நிலையில் உள்ளனர். தமிழர்கள் சிறிலங்காவின் தலைநகரில் ஓர் அச்சம் கலந்த மனோபாவத்துடன் தான் வாழ்கின்றனர்.

கொழும்பை விட்டு விலகுவதற்கும் வெளியே செல்லும் அனுமதி பெறவேண்டும். இது ரஸ்ய கம்யூனிச அரசின் பொழுது, யூதர்கள் இஸ்ரேலுக்குச் செல்லும் பொழுது பெறும் பத்திரத்திற்கு ஒத்ததாக உள்ளது. சிறீலங்கா அரச அனுவலர்களும் சிறீலங்கா அரச படைகளும் தமிழர்களை வெளிநாட்டவர்களாகக் கணிப்பது, ஐரோப்பிய நாடுகளில் வெளிநாட்டவர்களைக் காவல் நிலையங்களில் பதிவு செய்யும் செயற்பாட்டுடன் ஒப்பிடக்கூடியதாக உள்ளது.

போர்ச் சூழல்களும் சொந்த நாட்டிலேயே தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்தலும் அந்நியப்படுத்தப்படுதலும் தமிழ் மக்களுடைய தமிழ்த் தேசிய ஆன்மாவுள் ஆழமான பதிவுகளை ஏற்படுத்தியுள்ளன. இருபது வருடங்களுக்கு முன்னர் சமஸ்டி அமைப்புக்கு மக்கள் ஒத்துழைத்திருக்கலாம். ஆனால், தற்பொழுது ஒற்றையாட்சியின் கீழ் வாழ்வீது கடினமென உணர்கிறார்கள். தமக்கு தமது நாடு அவசியம், அங்கே தான் மனிதமாண்பும் மனிதத்துவமும் காப்பாற்றப்படும் என்பதில் தமிழ்மக்கள் உறுதியாகி வருகிறார்கள்." இவ்வாறு இவ்வருட முதல் மாதத்தில் தாயகம் சென்று திரும்பிய இலண்டன் கத்தோலிக்க பணியக இயக்குனர் அருட்திரு. தி.இ. தேவராஜன் அடிகள் டென்மார்க்கில் நடைபெற்ற இலங்கையில் முரண்பாடு என்ற பன்னாட்டு மகாநாட்டில் தனது அனுபவத்தை கொழும்பு நேற்றும் இன்றும், யாழ்குடாநாடு நேற்றும் இன்றும், வன்னி நேற்றும் இன்றும், கிழக்குப் புலம் நேற்றும் இன்றும் என்ற நான்கு தலைப்புக்களில் பகிர்ந்து கொள்கையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் "அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட இறப்புக்களுக்கும், அளவிட முடியாத சொத்தழிவுகளுக்கும், உயர்தொழில் நுட்பம் நிறைந்த போரின் இடைமிலும் அகப்பட்டு அல்லலுறும் அப்பாவி மக்கள் சார்பில் போரை நிறுத்தி பேச்சுவார்த்தைகளுக்கு சிறீலங்கா செல்ல அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு உங்கள்முன் எனது உள்ளக் குமுறல்களை சமர்ப்பிக்கின்றேன்" எனவும் கூறினார்.

இம் மகாநாட்டில் முன்னாள் டென்மார்க் பிரதமர் உட்பட பல மனித உரிமைகள் பேணும் சங்கங்கள் பங்கேற்றனர். விடுதலைப் போரில் திருமறையின் பங்கென்ற தலைப்பில் அருட்திரு. இம்மனுவேல் அடிகளும் , விடுதலைப் போராட்டமும் உடைந்த வாக்குறுதிகளும் ஒப்பந்தங்களும் என்ற தலைப்பில் இலண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் யேம்ஸ் கரனும், போரின் ஒரு ஆயுதம் பாலியல் வன்முறை என்ற தலைப்பில் செல்வி மானும் இலங்கை அரசின் அடக்குமுறைகள் என்ற தலைப்பில் சிங்கள எழுத்தாளர் விஜயமன்னவும் உரைகள் நிகழ்த்தினர். ✳

## மீண்டும் மீண்டும் படையினர் தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வெறியாட்டம்

சிறீலங்காப் படைகள் தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைகளுக்கு மீண்டும் மீண்டும் உள்ளாக்கி இனமான உணர்வுக்குச் சவால் விட்ட வண்ணம் உள்ளனர். யாழ் கண்டி வீதி அரியாலையைச் சேர்ந்த பதினேழு வயதே நிரம்பிய ஸ்ரீபாலக்குமார் அஜந்தனா இம்மாதம் 15ம் திகதி பிற்பகல் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் மிருகத்தனமான முறையில் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். மேற்படி பெண் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் இரத்த வெள்ளத்தில் கிடக்கையில் கண்டெடுத்து வந்ததாக வைத்திய சாலையில் தெரிவித்த கோப்பாய் பொலிசார், தமது சகபாடியின் குற்றச் செயல் குறித்து எதுவுமே கூறவில்லை என யாழ் வைத்தியசாலை வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதத்தில் செவிப்புலனும் பேச்சுத் திறனுமற்ற தமிழ்ச் சகோதரி ஒருவரை சிறீலங்கா படையினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதும் இதனால் தற்கொலை முயற்சியில் இறங்க முற்பட்ட அவரை அவரின் தாய் தெய்வாதீனமாக தடுத்து நிறுத்தியதும் தெரிந்ததே.

இது தொடர்பாக இராணுவத்தின் பலாலித் தலைமையகம், அதனை இராணுவத்தினர் செய்யவில்லை என தமது இராணுவத்தினருக்காக வக்காலத்து வாங்கியதும் அல்லாமல் அதனை நிரூபிப்பதற்கு போதிய சாட்சியங்கள் இல்லை எனவும் கூறியுள்ளது. இத்தகைய செற்பாடுகள் மேலும் மேலும் சிறீலங்காப் படையினர் குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான உற்சாகத்தை அளித்து வருகிறது. ✳

## ஐந்து தமிழ்ச் சிறுவர்கள் ஊர்க்காவற் படையினரால் கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து தமிழ்ச் சிறுவர்கள் சிறீலங்கா ஊர்க்காவல் படையினரால் கடத்திச் செல்லப்பட்டு விவரம் ஏதும் தெரியாத நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஐவருமே சிறீலங்கா ஊர்க்காவற் படையினரால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்தச் சம்பவம் சந்திரிகா அரசால் புதிதாக தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றமான கல்ஓயா குடியேற்றத்திட்ட ஆரியவத்தை 36ம் காலனியில் நடந்துள்ளது.

தமிழ்ச் சிறுவர்கள் முயல் துரத்திக் கொண்டு இந்த 36ம் காலனிக்குள் சென்ற பொழுதே இந்தக் கடத்தலில் சிங்கள ஊர்க்காவற்படையினர் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சிறுவர்களின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் விவரம் அறிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு செல்வதற்குக்கூட பிரயாணத்திற்கான பணம் இல்லாத வறியவர்களாக – வீடுகளில் இருந்தே அழுது குமுறுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடை கோதண்ட கொழுத்திக் குளத்தில் வயல் அறுவடைக்குச் சென்ற தமிழ் விவசாமிகள் இருவரில் ஒருவரை சிறீலங்கா இராணுவத்தினர் கடத்திச் சென்றுள்ளனர். தப்பி ஓடிவந்த மற்ற விவசாமி மூலம் இத்தகவல் வெளியாகி உள்ளது. இருபத்தேழு வயதான செல்வராஜா கேதீஸ்வரன் என்பவரே இவ்வாறு இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டவராவர். ✳

# தொழிலாளர் தமது கஸ்டத்தை தெரிவிப்பது தேச விரோதக் குற்றமா?

"வடக்கு கிழக்கில் எமது படையினர் கால்களை இழக்கும் வேளையில் இங்குள்ளவர்கள் பாதணி கேட்டுப் போராடுகின்றனர்." இவ்வாறு தற்பொழுது சந்திரிகா அரசிற்கு எதிரான வேலை நிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை, ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் பெர்னாண்டோ குரே சாடுகின்றார். ஆனால், இவரின் இச்சாடலானது எந்த வகையில் பொருத்தப்பாடானது என்பது எமக்கு விளங்கவில்லை.

ஏனெனில், பெர்ணாண்டோ குறே பாதம் இல்லாமலும் இல்லை. அவர் போர்க்களத்திற்குச் செல்வதாகவும் இல்லை. பெர்ணாண்டோ குறே போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொண்டுள்ள சந்திரிகா அரசின் ஓர் அங்கத்தவர் மட்டுமே. ஆகையினால், விருப்பின்றி அலையும் தொழிலாளர்களின் கஸ்டங்களையோ, கால்களையே இழக்கும் படையினரின்



துயரங்களையோ இவர் அனுபவிப்பவராக இல்லை. இவைதான் ஒருபுறம் இருக்க, வடக்கு - கிழக்கில் ஒரு போரை நடத்துமாறு தொழிலாளர்கள் அரசிற்கு ஆணை வரம்பிட்டார்களா? அல்லது போரைத் தொடர்ந்து நடத்தவென மக்களிடம் வாக்குக் கேட்டு அவர்களின் அங்கீகாரம் பெற்றா சந்திரிகா அரசு ஆட்சிக்கு வந்தது?

ஓர் போர் நடைபெறுவதற்கும், இரத்த ஆறு ஓடுவதற்கும் அரசியல்வாதிகளே காரணமாகும். தாம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கும், அதைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், அவர்கள் ஊட்டி வளர்த்த இனவெறியே இன்று போர் நடைபெறுவதற்கும், அது முடிவில்லாமல் தொடர்வதற்கும் காரணமாகும். இதற்கும் தொழிலாளர்களுக்கும் என்ன தொடர்பு.

இது தவிர, சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு, மக்கள் வாக்களித்தமைக்குக் காரணம் – ஒரு சகாப்தத்திற்கு மேலாக நடைபெற்றுவரும் போரை முடிவிற்கு கொண்டு வருவதற்கும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஓர் அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்குமே ஆகும். அத்தோடு போரிற்கென ஒதுக்கீடு செய்யப்படும் பெரும்தொகை நிதியை அபிவிருத்திப் பணிக்குத் திசை திருப்புவதற்கும் அதன் மூலம் தொழிலாளர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்குமே ஆகும். ஆனால் சந்திரிகா அரசு அதனைச் செய்யவில்லை. மாறாகப் பெரும்தொகை நிதியை போரிற்கு ஒதுக்கீடு செய்வதோடு சிங்கள மக்களையும் போரிற்குள் வரிந்து தள்ளும் வகையிலேயே செயற்பட்டும் வந்துள்ளது, வருகின்றது. போரே ஏனைய யாவற்றிலும் முதன்மை பட்டதொன்றாக அரசினால் மாற்றப் பட்டுள்ளது.

அரசின் போக்கானது, மக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு அளித்த ஆதரவிற்கு, அதிகாரத்திற்கு முற்றிலும் மாறுபட்டதானதாகும். ஆனால், ஆட்சி யாளர்கள் தற்பொழுது அதனை ஏற்றுக்கொள்ளவதாக இல்லை. போரிற்கு எதிராக மக்கள் குரல் எழுப்புவதும், தமது உரிமைகளுக்காக குரல் கொடுப்பதையும் அரசு ஒரு தேச விரோத நடவடிக்கையாகவே பார்க்க முற்படுகின்றது. இதன் வெளிப்பாடே, தொழிலாளர்கள் தமது உரிமைக்கான போராட்டத்தை அரச தரப்பு கொச்சைப்படுத்த முனைந்துள்ளமை ஆகும். அதாவது, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக செயற்படும் அரசு, மக்கள் தமக்களித்த வாக்குறுதியை நிறைவு செய்யுமாறு கூறுவதை துரோகச் செயல் எனவும் தேசபற்று உணர்வு அற்ற செயலெனவும் மாற்ற முயல்கின்றது.

ஆனால், சந்திரிகா அரசு இனப்பிரச்சினைக்கு போர் மூலம்தான் தீர்வு காண வேண்டும் எனக் கருதும் வரை, இதைத் தவிர அதனால் வேறு எதையுமே கூற இயலாது. ஆகையால், தொழிலாளர் கோரும் சம்பள உயர்வானது, சந்திரிகா அரசிற்கு ஓர் வேண்டாத தலையிடியாக வருவதொன்றும் ஆச்சரியமான தல்ல. இந்த நிலையில், தொழிலாளர் தமது பலத்தைக் காட்டினால் ஒழிய, சந்திரிகா அரசு பணிந்து போகப்போவதில்லை. ✳

**சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு கட்சிக்கு மக்கள் வாக்களித்தமைக்குக் காரணமே – போரை முடிவிற்கு கொண்டு வருவதற்கும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஓர் அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்குமே ஆகும். இவ்வாறு மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து பதவிக்கு வந்த அரசு, போரை முன்னரைவிட தீவிரப்படுத்தி நாட்டின் முழுவளத்தையும் அதற்கு ஒதுக்கினால் பாதிப்படுவது சாதாரண மக்களே. இவற்றை வெளிப்படுத்தவே தமது வேலை நிறுத்தங்கள் மூலம் சிறிலங்கா அரசிற்கு நெருக்கடி கொடுக்க தொழிலாளர்கள் முனைந்துள்ளனர்.**

**தொழிலாளர்கள் போர் காரணமாக கஸ்டங்களை அனுபவிக்க வேண்டும் என்பது போல் சந்திரிகா அரசு கூறுவது எவ்வகையில் நியாயம்? தாம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கும், அதைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், அவர்கள் ஊட்டி வளர்த்த இனவெறியே இன்று போர் நடைபெறுவதற்கும், அது முடிவில்லாமல் தொடர்வதற்கும் காரணமாகும். இதற்கும் தொழிலாளர்களுக்கும் என்ன தொடர்பு.**

## இராணுவத்தினரால் துன்புறும் தமிழீழ மக்கள்

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்டு வெடிக்காமல் கிடந்த எறிகணை ஒன்றை எடுத்து விளையாடிய இரு சிறுவர்கள் அவ் எறிகணை வெடித்ததினால் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஏப்ரல் 17ம் திகதி காலை நடந்துள்ளது.

புத்தாண்டான 14ம் திகதி அதிகாலை தன்னுடைய குடும்பத்துடன் கோவிலுக்குச் சென்று வழிபட்டு விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மட்டக்களப்பின் பிரபல வர்த்தகர் கே. ஜெகதீஸ் இராணுவத்தினரின் சூட்டினால் படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் இவர் கூட சென்று கொண்டிருந்த இவரின் மனைவியும் இரு குழந்தைகளும் தெய்வாதீனமாக தப்பியுள்ளதாக செய்திகள் தெரிவிக் கின்றன.

மட்டக்களப்பு கல்லடி சிறீலங்கா இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் கல்லடிக் கடற்கரையில் தமிழ் மீனவர்கள் இருபது பெயருக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான வலைகளையும் மீன்பிடி உபகரணங்களையும் எரித்துச் சாம்பலாக்கியுள்ளனர்.

மதுறு ஓயாச்சந்தி, சியம்பலங்குடாச் சந்தி மல்வத்தை ஆகிய இடங்களூடாக பயணம் செய்யும் தமிழ்ப் பொது மக்களிடம் சிறீலங்கா இராணுவத்தினர் பணம் அறவிட்டு வருகின்றனர். இவ்விடங்களூடாகப் பயணிக்கும் லொறிச்சாரதிகளிடம் பெருமளவிலான பணம் இராணுவத்தினரால் கப்பமாக கேட்கப்படுகிறது. மற்றையவர்களிடம் 250 ரூபா பறிக்கப்படுகிறது.

யாழ் தீவுப் பகுதி கடற்கரைகளில் இள வயதுத் தமிழ் பொது மக்களின் சடலங்கள் ஏப்ரல் 6ம் 7ம் 8ம் திகதிகளில் கரையொதுங்கி உள்ளன. 6ம் திகதி நயினாதீவுக் கடற்கரை யோரமாகவும் 7ம் திகதி அனலைதீவுக் கடற்கரையிலும் 8ம் திகதி நெடுந்தீவுக் கடற்கரையிலும் ஒதுங்கிக் கிடந்த இச்சடலங்கள் மிகப்பழுதடைந்து காணப்பட்டுள்ளன. இம் மரணங்கள் எப்படி நிகழ்ந்தன இறந்தவர்கள் உடைய அடையாளங்கள் என்பன எதுவும் கண்டுபிடிக்க முடியாததாக உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே கொடிகாமம் மத்துவிலில் 25 வயது மதிக்கத்தக்க தமிழ்ப் பொது மகன் ஒருவரைச் சுட்டுக்கொன்ற படையினர் அவரின் சடலத்தை யாழ் வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர். ✳

# ஒருங்கிணைந்த விவசாயம்

உலகில் தலைதூக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் இரண்டு. ஒன்று, பெருகிவரும் ஆயுதப் பெருக்கங்களுக்கிடையில் சமாதானத்தை நிலை நாட்டுவது. இரண்டு, பெருகிவரும் சனத்தொகைக்கு உணவளிப்பது. இவற்றில் முதலாவது விடயம் உலகளாவிய ரீதியில் ஒன்று பட்டு தீர்க்கப்படவேண்டிய விடயமாகும். இரண்டாவது விடயமான உணவளிப்பது என்பது நாட்டிலுள்ள ஒவ்வொரு மக்களும் தத்தமது உணவுத்தேவையைத் தாமே பூர்த்தி செய்வதன் மூலமே, ஏற்படும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்க முடியும்.

நாளாந்தம் நாம்செய்யும் ஒவ்வொரு முயற்சிகளையும் விஞ்ஞான தொழில் நுட்பத்துடன் சேர்த்துச் செய்யும்போது, அச்செயற்பாட்டின் உச்சப்பயனைப் பெறமுடியும். ஒரு அலகு நிலத்திலிருந்து எவ்வளவு பயனைப் பெறமுடியுமோ அவ்வளவு பயனையும் பெற முயற்சித்தல் வேண்டும். அதேவேளை ஒரு அலகு நிலத்திலிருந்து ஒரு பயிர் மூலம் நிலத்தின் உச்சப்பயனைப் பெறமுடியுமா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

ஆகையினால், பல்லினப் பயிர்ச்சொய்கை ஒருங்கிணைந்த வேளாண்மை முறைகளை நாம் எமது வேளாண்மைத்துறையில் உட் புகுத்துவதன்மூலம் வருமானத்தை அதிகரிக்க முடியும்.

பருவமழை குறைந்துள்ள இக் காலத்தில் பயிர்ச்செய்கையை மாத்திரம் நம்பியிருக்கும் விவசாயிகள் பெரிதும் பாதிப்பிற்கு ஆளாகிறார்கள். பயிர்ச் செய்கை தோல்வியடையும் காலங்களில் வருமானத்திற்கு கைகொடுக்கக் கூடியதான கால்நடை வளர்ப்பையும் ஒன்று சேர்த்து பயிர்செய்கை மேற்கொள்வதன் மூலம் தமது நிலையான வருமானத்தைத் தேடிக் கொள்ள முடியும்.

பயிர்ச்செய்கையுடன், கால்நடை வளர்ப்பு, நிரந்தர வனப்பயிர் வளர்ப்பு, விவசாயம் கால்நடை சார்ந்த விவசாயக் கைத்தொழில் போன்றவற்றை ஒருங்கிணைத்துத் திட்டமிட்ட அடிப்படையில் நடை முறைப் படுத்தும்போது ஒரு அலகு நிலத்திலிருந்து பெறும் வருவாய் அதிகரிக்கின்றது.

ஒருங்கிணைந்த வேளாண்மை மேற்கொள்வதானால் பல நன்மைகள் கிடைக்கின்றது. அவையாவன......

✳ பயிர் கழிவுகளையும், தானியக் கழிவுகளையும் கால்நடை உணவாகப் பயன்படுத்தலாம்.

✳ கால்நடைக் கழிவுகளை உயிர்வாயு உற்பத்திக்கும், பயிர் உற்பத்திக்கும் பயன்படுத்தலாம்.

✳ இயற்கை சக்தியைப் பயன் படுத்தலாம்.

✳ பண்படுத்தலுக்கு மிருக வலுவைப் பயன்படுத்தலாம்

✳ பல்வகைப் போசணை உணவுப் பொருட்களான பால், முட்டை, இறைச்சி, தானியம், பருப்பு. போன்றன கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

✳ ஒன்றுக்கொன்று உதவியாக இருப்பதால் உற்பத்திச் செலவு குறைகிறது.

✳ மண்வளம் அதிகரிக்கும்.

✳ வருடம் முழுவதும் சீரான வருமானம் கிடைக்கிறது.

✳ கால்நடை தீவனச்செலவு குறைகிறது.

✳ வருடம் முழுவதும் தொழில் வாய்ப்புக் கிடைக்கிறது.

வளம் குறைந்த நிலங்களிலும், வேலிகளிலும், சதுப்பு நிலங்களிலும் கால்நடைத் தீவனத்திற்கு ஏற்ற இலை, குழை மரங்களையும்( கிளிசிறிடியா, முள்முருக்கு, இப்பில் இப்பில், கருவேல், காட்டுச் சூரியகாந்தி போன்றன) தீவனப் புற்களையும் (நேப்பியர், கினிபி, பிரகேரியா, பிரிசாந்தா, பிரிகேரியர், மியூடிகா போன்றன) நடுவதனால்.

✳ கால்நடைத் தீவனம் பெறக் கூடியதாக இருக்கும்.

✳ பசுந்தாட் பசளை பெறக்கூடியதாக இருக்கும்.

✳ வளங்குறைந்த நிலங்களையும் பயனுள்ளதாக மாற்றலாம்.

✳ மண்அரிமானம் குறைகிறது.

✳ கூற்றுத்தடை ஏற்படுகிறது.

✳ எரிப்பதற்கான விறகு கிடைக்கிறது.

இதே போல வனப்பயிர்களான வேம்பு, தேக்கு, மா, பலா, புளி, இலுப்பை, பனை, தென்னை, போன்ற நீண்டகாலப் பயிர்களை நடுவதனால்,

✳ காற்றுத்தடை

✳ மண்அரிமானத் தடை

✳ எரிப்பதற்கான விறகு

✳ தளபாடம் செய்வதற்கான மரம்

✳ எண்ணெய், வீட்டுப்பாவனை, மனித உணவுப் பொருட்கள்

✳ தரிசு நிலங்களைப் பயன்படுத்தல்

✳ கால்நடைகளுக்கான உணவு போன்ற பல நன்மைகள் கிடைக்கின்றன.

குடிசைக் கைத்தொழில்களை உள் வாங்குவதன் மூலம் வருமானம் மேலும் அதிகரிக்கும். உதாரணமாக பாலை திரவப்பாலாக விற்பதிலும் பார்க்க, அதனை பாற் பொருட்களான தயிர், மோர், நெய், சீஸ் போன்ற பொருட்களாக மாற்றி சந்தைப்படுத்தும்போது வருமானம் அதிகரிக்கின்றது.

எள் உற்பத்தி செய்து விதையாக விற்பதைவிட, எண்ணையாக்கி விற்பதால் வருமானம் அதிகரிப்பதுடன், கால்நடைத் தீவனத்திற்கு எள்ளுப பிண்ணாக்கும் கிடைக்கிறது.

இவற்றுடன் இயற்கைச் சக்தியால் இயங்கும் காற்றாலை, சூரிய மின்கலம் போன்றவற்றை உள்ளடக்கும்போது எரிபொருள் மீதப்படுத்தப்படுவதுடன், வருமான அதிகரிப்பும் ஏற்படுகிறது.

எனவே கடும் வெள்ளம், கடும்வரட்சி, வேறு பல காரணங்களால் ஏற்படும் அழிவுகளுக்கு விவசாயம் உள்ளதாகும்போது வருமானத் தளம்பல் நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்கு ஒருங்கிணைந்த வேளாண்மையை மேற்கொண்டு ஒவ்வொருவரது குடும்பப் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவோம்.

தொகுப்பு:- செ. முருகையா
(தமிழீழம்)

## அஞ்சலி
## மனதில் வரைந்த கோலங்கள்
## (போராளிக் கலைஞர்களின் நினைவுக் குறிப்புகள்)

### லெப். கேணல் பாவரசன்(பைப்) சின்னத்துரை - ஆனந்தகுமார்

சிரித்த முகம். எப்போதும் செயற்படும் கரங்கள், மண்ணையும் மக்களையும் போராட்டத்தையும் நேசிக்கும் மனம். இவ்வாறு செயற்பட்ட ஒரு போராளியை, ஒரு கவிஞனை இன்று நாம் இழந்துவிட்டோம். பைப் என்றழைக்கப்படும் பாவரசன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நீண்டகால உறுப்பினர். கேணல் கிட்டு அவர்கள் யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த காலத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கெதிரான பல தாக்குதல்களில் பங்குபற்றியவர் பாவரசன். இவ்வாறான ஒரு சமர்க்களத்தில் தன் ஒரு காலை இழந்தபோதும், பாவரசன் இன்னும் முனைப்போடு போராட்டத்துடன் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். சமர்க்களங்களைவிட, இலக்கியத்திலும் பாவரசனுக்கு ஆர்வமிருந்தது. போராட்டத்துடன் மக்களை இணைத்து, இனவாத அரசுக்கெதிராக அவர்களை எழுச்சி பெற வைக்க வேண்டுமென்பதில் பெரு விருப்பங்கொண்ட பாவரசன், அதற்காக பல கவிதைகளையும் இசைப் பாடல்களையும் எழுதியுள்ளார். அவருடைய பாடல்கள் போருணர்ச்சியும் வீரத்துடிப்பும் மிக்கவை. வெளிச்சத்திலும் இவர் கவிதைகள் பிரசுரமாகியுள்ளன. பழகுவதில் இனிமையும் பண்பும் நிறைந்த பாவரசன் 10-09-1997 அன்று 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையில் வீரச்சாவடைந்தார். இந்தச் சடுதியான இழப்பு, எல்லோர் மனங்களிலும் மாறாத ஓர் ஆழமான நினைவுத் தடயமே.

### மேஜர் சிட்டு
### சிற்றம்பலம் - அன்னலிங்கம்

எங்கள் மண்ணில் பாடித்திரிந்த குயிலை - எல்லோரின் மனங்களையும் தன் குரலால் வசப்படுத்திய பாடகனை - காலத்தில் தன்னைப் பதிய வைத்த கலைஞனை, எங்கள் உணர்வுகளோடு ஒன்றிவாழ்ந்த போராளியை நாங்கள் இன்று இழந்துபோனோம். சிட்டு, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் யாழ் மாவட்டப் பொறுப்பாளராகவும் புலிகளின் குரல் வானொலியின் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர். அக்காலப் பகுதியில் பல கலைஞர்களை போராட்டத்துடன் இணைத்து பல நிகழ்ச்சிகளை உருவாக்கினார். போராட்டத்தின் அவசியத்தையும் போராட்டக் கருத்துக்களையும் மக்களிடத்தில் எடுத்துச் சொல்ல கலைகளினூடாகச் செயற்பட்ட சிட்டு, தானும் ஒரு கலைஞனாகப் பரிணமித்தார். தமிழீழத்தின் மிகச் சிறந்த குரல்வளம் மிக்க பாடகராக பல பாடல்களைப் பாடித் திகழ்ந்தார். இயல்பாக அமைந்த ஞானத்தை மேலும் வளர்த்த முறையால் எங்கள் தேசத்தின் முதன்மைப் பாடகராக மாறினார். ஈழத்திலே அண்மைக்கால பாடகர்களில் தனக்கு நிகர் தானே என்ற வகையில் இவரே இருந்தார். பாடல் வரிகளின் பொருளுணர்ந்து, அந்த உணர்வை இசையுடன் இணைத்துப் பாடியவர் இவர். கிராமியப் பாடல்களுடனும் கடலோர வாழ்வோடும் உறவாகி தன் இளமைக்கால அனுபவங்களைப் பெற்றிருந்த சிட்டு, அவற்றை தன் இசைக்கோலங்களில் அருமையாக வரைந்தார். தான் பாடிய பாடல்களுக்கேற்ப போர்க்களத்தில் சமரிட்டு 01-08-1997 அன்று வீரச்சாவடைந்தார். எங்கள் மனசோடு ஒன்றிய இந்தப் போராளிப் பாடகரை இழந்த துயரம், நம் காலத்தில் பெருங்காயமாக உறைந்து போயிருக்கிறது. தமிழீழத்தின் இசைக் காலத்தில் சிட்டு ஒரு புதுக் கோலமே!

## யாழ் நகர் குண்டு வெடிப்புக்கு படையினரே பொறுப்பு
## தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவிப்பு

தமிழ்ப் புத்தாண்டையொட்டி, பொருட்கள் வாங்குவதற்காக பொது மக்கள் திரண்டிருந்த வேளையில், யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் குண்டு வெடிப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது. கர்ப்பிணிப் பெண் ஒருவர் கொல்லப்பட்டு பதினெட்டுப் பொது மக்கள் காயமடைந்துள்ளனர். இக்கொடிய சம்பவம் சிங்களப்படையினராலேயே நடாத்தப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. ஏப்ரல் 12ம் திகதி மாலை 5.40 மணியளவில் கஸ்தூரியார் வீதி- காங்கேசன்துறை வீதிச் சந்திக்கு அருகே உள்ள மின்சார நிலைய வீதியிலேயே இக் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தாய் எனவும் அவரின் கணவரும் அவருடன் புடவை வாங்க வந்திருந்தார் எனவும் ஆயினும் தெய்வாதீனமாக தப்பியுள்ளார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களை யாழ் வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற பொழுது அங்கு சிகிச்சை அளிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லாத நிலையில் தனியார் வைத்திய நிலையங்களுக்கு கொண்டு செல்லும்படி வைத்தியர்கள் கூறியதாகவும் தலைமைப்பீடச் செய்திக் குறிப்பு சுட்டிக்காட்டியுள்ளது. வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவர்களில் மூவர் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

தமிழ்ப் பொது மக்களுக்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் நோக்கில் சிறீலங்காப் படையினர் தொடங்கியுள்ள இந்த நாசகாரச் செயல் மேலும் தொடரக் கூடும் என்ற அச்சமும் பீதியும் தமிழ்ப் பொது மக்களிடை தலைதூக்கியுள்ளது. இவ்வாறு பொதுமக்கள் அதிக அளவில் கூடும் பகுதிகளில் குண்டுகளை வெடிக்கச் செய்யும் இழிசெயல்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னர் நடாத்திய படையினர் அவற்றை விடுதலைப் புலிகளே செய்தார்கள் எனப் பிரச்சாரப்படுத்த முயன்று தோல்வி கண்டமை குறிப்பிடத்தக்கது. வழமையாக யாழ்ப்பாண நகரில் குவிந்து காணப்படும் படையினர் இந்தக் குண்டு வெடிப்பு நடைபெற்ற நேரத்தில் மட்டும் மாயமாக ஓடிமறைந்து சம்பவம் நடைபெற்று அதிக நேரத்தின் பின்பே அவ்விடத்திற்கு வந்ததும் பொது மக்களால் பேசப்படுகிறது. ✳

# கடல் மடியில் கலந்த கனல்கள்

## கடற்கரும்புலி மேஜர் வலம்புரி

கடற்கரும்புலி மேஜர் வலம்புரிதான் வீட்டில் கடைக்குட்டி. முதல் இரண்டு அண்ணாக்களும் போராளிகள். இவளும் தனது பங்குக்கு வந்துவிட்டாள். ஆனால் கடல் என்றால் பயம். என்ன செய்வது? பயிற்சி எடுக்க வேண்டும். கடலில் மெல்ல இறங்குவதும், அலைகள் வர ஒரே ஓட்டமாய் மேலே ஏறுவதும் இப்படித்தான் வலம்புரியின் பயிற்சி தொடங்கி முடிந்தது.

அவளின் முதற் களம் மக்களுக்கு ள்ளேயே அமைந்தது. முள்ளிவாய்க்கால் மக்களுடன் ஆரம்பமாகி, விடத்தல்தீவு, நாச்சிக்குடா மக்கள் வரை அவர்க ளுடன் ஒன்றாகிப் போனவள். 1993இல் மாத்தளன் பகுதியில் விமானங்கள் வீசிய குண்டுகள் பல அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களைக் குடித்தன.

அன்று அவள் பட்டபாடும், மூன்று நாட்களாகச் சாப்பாடுமின்றி மக்களுக்காக அவள் ஓடிய ஓட்டமும் இன்றும் அந்த மக்களின் மனதில் பசுமையாக உள்ளது.

தளத்தில் நிற்கும் உடும்பு, கீரி, கோழிக்குஞ்சுகள் வண்ண வண்ண நிறங்களில் காட்சி தந்தால், அங்கே வலம்புரி நிற்கின்றாள் என்று அர்த்தம். அங்கு வருவதென்றால் சிலருக்குப் பயம். அவர்கள் இருந்து கதைக்கின்ற நிலைகளைப் படம் வரைந்து, அவர்கள் மீண்டும் வரும்போது சுவரில் ஒட்டுவது, பொறிக்கிடங்கு வைப்பது, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பட்டப் பெயர் சூட்டுவது இப்படி இவளின் குறும்புகள் கணக்கில் அடங்கா.

> "நான் கரும்புலியாகப் போக வேண்டும். எம் மக்கள் நிம்மதியாகக் கடலில் இறங்க வேண்டும்." அவளின் மனதில் இவ் வரிகள் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தன

இந்தக் குறும்புகளுக்கிடையிலும் அவளு க்குள்ளே ஒரு தாகம்.

*"நான் கரும்புலியாகப் போக வேண்டும்: எம் மக்கள் நிம்மதியாகக் கடலில் இறங்க வேண்டும்."*

அதற்கான பயிற்சிகளில் இறங்கினாள். படகோட்டுவதிலும், நீச்சலிலும், ஓட்ட த்திலும் அவள் கெட்டிக்காரி. எல்லாவற்றிலும் போட்டிபோட்டே செயற்படுவாள். பயிற்சியின்போது களைப்படையும் சக போராளிகளை உற்சாகப்படுத்துவதும், இயலாமல் விட்டால் பயிற்சிக் கருவிகளில் ஒரு பாகத்தை மறைத்து வைத்துவிட்டு அதைத் தேடி எடுக்கும் சாட்டில் மற்றவர்கள் ஓய்வு எடுப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பதும், நீச்சல் தெரியாதவர்களைக் கடலில் தள்ளிவிட்டு வேடிக்கை பார்ப்பதும், எந்த இரவானாலும் சக தோழிகளுக்கு வாய்க்குச் சுவையாகச் சமைத்துக் கொடுப்பதும், இரவிரவாக தேநீர் தயாரித்து நித்திரையில் இருப்பவர்களை எழுப்பிக் கொடுத்து அவர்களிடம் வாங்கிக் கட்டுவதும், களஞ்சிய அறையில் தாக்குதல் நடாத்தி முட்டை, பால்மா எடுத்துப் 'புடிங்' செய்வதும்......

அன்றும் இப்படித்தான், களஞ்சியத்தில் 'கன்டோஸ்' இருந்ததை வலம்புரி கண்டுவிட்டாள். உடனே அவள் மனதில் திட்டம் தயாரானது. இரவோடு இரவாக ஐம்பது 'கன்டோஸ்' பெட்டிகளும் தலைமறைவு. பொறுப்பாளருக்குத் தெரியும் வலம்புரியின் ஆட்களின் வேலைதான் என்று. ஏனென்றால் அவருக்கும் ஒரு துண்டு 'கன்டோஸ்' கிடைத்தது.

மலை அசைவதுபோல் வரும் அலைகளுக்கிடையில் படகோட்டிக் கொண்டு சண்டையிடுவதில் கடற்புலி வீரர்கள் சளைத்தவர்கள் அல்ல. இதற்கு வலம்புரியும் விதிவிலக்கல்ல. மண்டை தீவு, புலி பாய்ந்தகல், கொக்குத் தொடுவாய், பராக்கிரம, திருமலை, வெற்றிலைக்கேணி, மன்னார், சுண்டிக் குளம் என்று இவளின் சண்டைப் படகு போகாத இடம் இல்லை.

"படகு இறக்கும்போது அம்பா பாட வேண்டும். இல்லாவிட்டால் தொலை ந்தோம். அன்றைக்கும் பூ இல்லாமலே பூசை நடக்கும்" என்று அவளை நினைவு கூர்ந்தனர் அவளின் தோழிகள்.

ஒவ்வொரு சண்டைக்குப் போகும் போதும் அவள் சொல்லிப் போவது இதுதான்.

"நான் கடற் சண்டையில் சாகக் கூடாது. கடற்கரும்புலியாகத்தான் போக வேணும்." அப்படியேதான் சென்றாள்.

கையில் இயந்திரம் வெட்டி பெரிய காயத்துடன் மருந்து கூடக் கட்டாது, தன் இலக்கைத் தவறவிடக்கூடாது என்ற துடிப்புடன் 1997.05.27 அன்று அவள் தன்னுடன் வந்த கடற்கரும்புலி மேஜர் சுதாகருடன் முல்லைக் கடற்பரப்பில் அலைகளோடு அலைகளாக கரைந்து போனாள்.

## கடற்கரும்புலி மேஜர் சந்திரா

"என்ர தம்பியைச் சுட்டவனை நான் சுடாமல் விடமாட்டன்" என்று சொல்லிச் சொல்லியே கடற்கரும்புலி மேஜர் சந்திரா தனது 50 கலிபர் துப்பாக்கியை இயக்குவாள். இவளின் வேகத்துக்கு ஈடாக 50 கலிபரும் எதிரிகளின் படகுகளை நோக்கி நெருப்பைக் கக்கும்.

சந்திரா இயக்கத்தில் இணையும் முன்னரே நீச்சலில் கெட்டிக்காரி. வந்த அன்றே 5 கடல் மைல் நீந்தி முடித்தவள். இதனாலேயே அவள் உடனேயே நீச்சல் பயிற்சி ஆசிரியராக நியமிக்கப்பட்டாள். தான் கடலில் நிறைய சாதனைகள் செய்ய வேண்டும் என்ற ஆவல் அவளிடம் இயல்பாகவே இருந்தது.

ஒருநாள் ஆழமான கிணறு ஒன்றைக் கண்ட பொறுப்பாளர் எல்லோரையும் கூப்பிட்டு, "இந்தக் கிணத்துக்குள்ள யார் முதலில் குதிக்கிறது பார்ப்போம்" என்று சொல்லி வாய் மூட முன்னர் சந்திரா கிணற்றுக்குள் நின்றாள்.

"இவள் எப்பவுமே இப்படித்தான். முந்திரிக் கொட்டை மாதிரி எல்லாத் திலேயும் முந்திவிடுவாள்" என்று ஏனையோர் சிரித்துக் கொண்டனர். சாப்பாட்டு விடயத்திலும், சந்திரா தான் முதன்மையானவள். கொஞ்சமேனும் பசி தாங்கமாட்டாள். இரவில் பயிற்சி முடிந்து, எப்படித்தான் களைத்து விழுந்து வந்தாலும் சாப்பிடாமல் உறங்கமாட்டாள். சாப்பாடு வரா விட்டாலும் கூட, "யாருடைய 'சென்றி'க்கெண்டாலும் சாப்பாடு வந்தா என்னையும் எழுப்புங்கோ. நான் இந்த இடத்தில தான் படுப்பன்" என்று தான் உறங்கும் இடத்தையும் எல்லோருக்கும் காட்டிவிட்டுத்தான் அவள் உறங்கப் போவாள்.

> "அந்தக் கடல் அரக்கனுக்கு என்ர இடியன் பதில் சொல்லும்" என்றவள் தனது படகை எப்போதும் சுத்தம் பண்ணி சிறுபிழையேனும் இல்லாமல் காத்து, எதிரியின் இலக்கை நெருங்கும் நாளை எண்ணிக் கொண்டிருந்தாள்.

ஆரம்ப காலத்தில் கிளாலிக் கடல் நீரேரியில் மக்களுக்கான பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சந்திரா, பின்னர் தொழில்நுட்பம் பயின்று 'சுகன்யா படையணி'யுடன் பல கடற் சண்டை களைக் கண்டு வந்தவள். சுகயீனம் காரணமாகப் படையணி யிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டாள். அவளுக்கோ தான் ஒரு கரும்புலியாகப் போக வேண்டும் என்ற அவா! அந்த அவாவில் மண்விழுந்துவிட்ட கோபம். பொறுப்பாளர் வரும் போதெல்லாம் ஒரே சண்டையாகத்தான் இருக்கும்.

இந்த நேரத்தில் தான் கடலில் மீன் பிடிக்கச் சென்ற அவளின் தம்பி உயிருடன் திரும்பவில்லை. சிறீலங்காக் கடற்படையின் கோரப் பசிக்குப் பலியான எத்தனையோ மீனவர்களில் அவனும் ஒருவனானான். சந்திராவால் பொறுமை யாக இருக்க முடியவில்லை. "அந்தக் கடல் அரக்கனுக்கு என்ர இடியன் பதில் சொல்லும்" என்றவள், கடும் பயிற்சி எடுத்துக் கொண்டாள். அவளுக்குப் படகும் கொடுக்கப்பட்டது. அவளின் பொழுது முழுவதும் படகுடனேயே கழியும். ஒவ்வொரு சின்னப் பிழையையும் பார்த்துப் பார்த்துத் திருத்துவாள். அவளின் படகைப் பார்த்து எவரும் குறை கூறக்கூடாது. அப்படிக் கூறிவிட்டால் அவர்கள் இருந்த பாடில்லை.

அவள் எதிர்பார்த்த அந்த நாளும், நேரமும் வந்தது. 1997.05.27 அன்று கண்களில் பொறிபறக்கச் சென்ற சந்திரா தன்னுடன் கூடவே வந்த கடற்கரும்புலி கப்டன் அருளையனுடன் முல்லைக் கடற்பரப்பில் எம்மைப் பிரிந்து காற்றில் கரைந்து போனாள்.

## கடற்கரும்புலி மேஜர் வினோதா

"கடற்கரும்புலியாகப் போற மனநிலை எல்லோருக்கும் வராதண்ணை. கட்டாயம் நான் கரும்புலியாகத்தான் போகப் போறன். அதுக்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாங்கோ". இப்படிக் கேட்டுத்தான் கரும்புலி மேஜர் வினோதா, சுலோஜன் நீரடி நீச்சற் பிரிவில் சேர்ந்து கொண்டாள். முதல் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற் கண்ணியும், வினோதாவும் இணை பிரியாத தோழிகள். பயிற்சியிலும் சரி, நீச்சலிலும் சரி இருவரும் இணைந்தே செயற்படுவர். ஆண் போராளிகளுடன் இணைந்து 30 கடல் மைலை நீந்தி முடித்தவர்கள். பயிற்சி முடிவில் பெண் கடற்கரும்புலிகளுக்கான முதலாவது இலக்குக்கு இருவருமே தேர்ந் தெடுக்கப்பட்டனர். இலக்கை நெருங்கும் சமயத்தில் திட்டம் திடீரென சிறு மாற்றத்துக்குட்பட்டு, அங்கயற்கண்ணி இலக்கு நோக்கிச் செல்ல வினோதா விருப்பமே இல்லாமல் தளம் திரும் பினாள்.

வல்வெட்டித்துறையில் பிறந்த வினோதா, எட்டுச் சகோதரர்களில் ஐந்தாவதாகப் பிறந்தவள். சிறுவயது தொடங்கிக் கடற்படைகளின் அட்டூழியங்களைக் கண்ணாலேயே பார்த்து வந்த வினோதாவுக்குப் பொறுமையாக இருக்க முடியவில்லை. 1992இல் தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொண்டாள்.

இவள் இயக்கத்தில் இணைந்தபோது அந்தத் தளத்துக்கு லெப்.கேணல் பாமா பொறுப்பாளராக இருந்தார்.

"நாங்கள் இப்ப இயக்கத்துக்கு ஆட்கள் எடுக்கிறது இல்லை, நீங்கள் வீட்டுக்குப் போங்கோ" என்று கூற, "நான் இயக்கத்துக்குத்தான் வந்தனான். வீட்ட போக வரேல்ல" என்று அவள் அடம்பிடிக்க,

"சரி இயக்கத்துக்குத்தான் வரப் போகிறீர்கள் எண்டால், இந்த தண்ணீர்த் தாங்கியில் ஏறிக் காட்டுங்கள்" என்றார் பாமா. சிறு புன்னகையுடன் விறு விறுவென ஏறினாள். வினோதா அன்றே எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்துக் கொண்டாள்.

எந்த வேலையையும் மறுக்காமல் செய்யும் வினோதாவை எல்லோருக்குமே பிடிக்கும். அவளின் திறமையினால், ஆரம்பகாலத்தில் பூம்புகார் மக்களுக்கான மேம்பாட்டு வேலைத் திட்டங்களைச் செய்து வந்தாள். பின்னர், சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவிலும், நளாயினி படைப்பிரிவிலும் பயிற்சி எடுத்து, அவர்களுக்கே நிர்வாக வேலையும் செய்தாள். தன்னுடன் உள்ள போராளிகளுக்கு எந்தக் குறையுமே விடமாட்டாள். எந்தக் காலத்தில் என்னென்ன வகையான உணவுகள் கிடைக்குமோ அத்தனையும் வரும். சோளம், கச்சான் என்று எதற்குமே குறைமிருக்காது.

> "கடற்கரும்புலியாகப் போற மனநிலை எல்லோருக்கும் வராதண்ணை. கட்டாயம் நான் கரும்புலியாகத்தான் போகப் போறன். அதுக்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாங்கோ".

வினோதா இருந்த தளத்தில் தேசியத் தலைவரின் படம் ஒன்றும் இருக்கவில்லை. அது அவளுக்குச் சரியான கவலை. மற்றைய தளங்களில்

தொடர்ச்சி 15ம் பக்கம்......

# நினைப்புச் சரி! கணிப்பே பிழை!!

யாழ் குடாநாடு, விடுதலைப் புலிகளின் சுவாசக் காற்றுப்பட்டு உயிர்க்க ஆரம்பித்திருக்கின்றது. எங்கே இந்த மண்ணின் மைந்தர்கள் நமைவிட்டு எங்கே போயினர் என்று, யாழ்குடா நிலத்து உயிர்ப்புள்ள அனைத்தும் சோகம்தழுவ நின்றபோது, இங்கே இருக்கின்றோம் என விடுதலைப் புலிகள் அருகிலேயே இருந்து ஆறுதல் சொல்லும் காட்சி குடாநாட்டில் தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் குடாநாட்டில் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டில், கொண்டுவந்துள்ளனர். தமது நடவடிக்கைகளை ஏனைய பகுதிகளுக்கும் விரிவாக்கி வருகின்றனர். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரிக்க, சிங்களப்படையினர் தமது படை நிலைகளைக் குறைத்து வருகின்றனர். தனது ஆக்கிரமிப்பு எல்லைகளைச் சுருக்க ஆரம்பித்துள்ளனர்.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டு, இனஅழிப்புப் போரை ஆரம்பிக்கும்போது இத்துணை கடுமையாக இந்தப் போர் இருக்கும் என, சந்திரிகா அரசாங்கம் எதிர்பார்த்திருக்கவில்லை.

யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவதும், விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்துவதும் அப்படிப் பெரிதான

– கப்பு –

காரியமாக இருக்கப்போவதில்லை ஏன்பதே சந்திரிகா அரசின் திடமான நம்பிக்கையாய் இருந்திருக்கக்கூடும்.

சந்திரிகா – ரத்வத்தை கூட்டு, யாழ் குடாநாட்டைக் கைப்பற்றியபோது அவர்களின் நம்பிக்கை ஒருவிதத்தில் பொய்க்கவில்லை. அதாவது குடா நாட்டைக் கைப்பற்றுவது மிகக் கடுமையாக இருக்கவில்லை. ஆனால், விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்துவதென்பது சாத்தியமாகவில்லை. என்றாலும் வந்தவரையில் லாபம் என்பதுபோல யாழ் குடாநாட்டில் கொடியேற்றி மகிழ்ந்தது சிங்களம்.

அந்தத் தென்பு அவர்களை, வன்னிக்களம் நோக்கி இழுத்துவந்ததென்பதுதான் சிங்களத்தின் துயரமாகிவிட்டது.

குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்திருக்கின்றன. விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான

> என்ன நடக்கிறது அங்கே எனத் தனக்கு மாதாமாதம் அறிக்கை தரும்படி சந்திரிகா பீதியுடன் கேட்டுக்கொள்ளும் வகையிலேயே குடாநாட்டு நிலைமை சென்று கொண்டிருக்கின்றது.

நெருக்கம் இறுக்கம் சிங்களத்தை பீதிகொள்ள வைத்திருக்கின்றது.

என்ன நடக்கிறது அங்கே எனத் தனக்கு மாதாமாதம் அறிக்கை தரும்படி சந்திரிகா பீதியுடன் கேட்டுக்கொள்ளும் வகையிலேயே குடாநாட்டு நிலைமை சென்று கொண்டிருக்கின்றது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்களின் விடுதலைப் புலிகளுடனான தொடர்பு பற்றியும் சிங்கள அரசாங்கம் கலக்கமடைந்துள்ளது. கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என மக்களை அடிக்கடி மிரட்டும் வகையில் நிலைமை தீவிரமடைந்துள்ளது என்பதை சிங்கள அரசாங்கமே ஒத்துக்கொள்ளுகின்றது.

ஆக்கிரமிப்புப் படையை விரைவில் வெளியேற்றுவோம் என விடுதலைப் புலிகள் குடாநாட்டில் ஒட்டிய சுவரொட்டியில் குறிக்கப்பட்ட வாசகங்கள் தமிழ்மக்களை எவ்வளவுக்கெவ்வளவு உற்சாகப்படுத்துகின்றதோ அதையொத்த அல்லது சற்றுக் கூடுதலாக அச்சத்தையும் கலக்கத்தையும் சிங்களப்படைக்கும் அரசுக்கும் அது கொடுக்கும் என்பது சர்வ நிச்சயமானது.

இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க அல்ல... முடித்து வைக்க(?) சிங்கள அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கை – இன்று, சிங்களத்தின் காலைச் சுற்றியுள்ள பாம்பாகியுள்ளது.

விடுதலைப் புலிகளை அழித்துவிட்டால், இனப்பிரச்சினையை அழித்ததற்கு சரியாகிவிடும் என்பது சிங்களத்தின் நினைப்பு. விடுதலைப் புலிகள் இல்லை என்றால் தமிழீழத் தேசிய ஆன்மா குரல் இழந்துவிடும் என்பது சிங்களத்தின் நினைப்பு. சிங்களத்தின் நினைப்பு சரியானதுதான். ஆனால், விடுதலைப் புலிகளை அழிக்கலாம் – பல வீனப்படுத்தலாம் என்று கணித்ததுதான் பொய்த்துப்போனது. இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தைத் தளத்தில் இருந்து யுத்தகளம் நோக்கி அவர்களை நகர்த்த வைத்ததற்கும், இத்துணை துன்பங்களை அவர்கள் சந்திக்க வைத்ததற்கும் விடுதலைப் புலிகள் தொடர்பான அவர்களின் பிழையான கணிப்பீடே காரணம்.

இன்று தமிழீழத்தின் அனைத்துப் பிரதேசங்களும், சிங்களத்தின் சவக்காடாய் மாறியுள்ளது. அவர்களால் வலிந்து ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் கோடிக் கணக்கான ரூபாய்களை விழுங்கிக் கொண்டிருக்கின்றது. உயிர் விலையையும் சிங்களம் தினமும் கொடுத்துக்கொண்டே இருக்கின்றது.

சிங்களம் பொருளாதார ரீதியாகவும் மனோர்வியல் ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டுப்போயுள்ளது. யுத்தத்தின் விளைவு அங்கு தொழிற் சங்கப் போராட்டங்களாய் வெடிக்க ஆரம்பித்துள்ளன. வாழ்க்கைச் சுமையாய் அது அழுத்துகின்றது. பயப்பீதியுடன் மக்கள் நொந்துபோயுள்ளனர். வடக்கு கிழக்கில் தொடரும் இழப்புக்களையும் தோல்விகளையும் சிறீலங்கா அரசு மறைத்து வருகின்றபோதும், யுத்தத்தின் யதார்த்தம் கொழும்பிலே எதிரொலிக்க ஆரம்பித்திருக்கின்றது.

இன்னும் என்னென்ன அழிவுகள் ஏற்படப்போகின்றதோ என்ற அச்சத்தில் நாட்டைவிட்டு ஓடித் தலைமறைவாகும் அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் வரை பீதியின் வாலில் தொங்கிக கொண்டிருக்கின்றனர். சனிமாற்றம் தமக்கான துன்பத்திற்கு களம் அமைத்துக் கொடுக்கலாம் என்பது அவர்களது நம்பிக்கை.

'சனிமாற்றம்' தமிழரின் உருவில் துன்பத்தைத் தருமோ என்ற நினைப்பு சிங்களத்தை வாட்ட, கொத்துக்கொத்தாய் தமிழர்களை அள்ளிச்சென்று அது சிறையில் தள்ளியது.

> இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க அல்ல... முடித்து வைக்க(?) சிங்கள அரசால் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கை இன்று சிங்களத்தின் காலைச் சுற்றியுள்ள பாம்பாகியுள்ளது.

சிங்களத்தின் நிலையிழந்த – நிதானமிழந்த இந்தக் குளறுபடியான பரிதாப நிலைக்கு, அதனது அன்றைய குடாநாட்டு வெற்றிதான் காரணம் என்பதை அது உணர முற்படுமா என்பது சந்தேகமே.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை, சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் அழிக்க முற்பட்டதுதான் இந்த அவலத்திற்கு காரணம் என்ற உண்மையை அது உணருமா..?

சிங்களம், வரலாற்றை தன் பாடமாக்கிக் கொண்டதில்லை. அது ஜெயசிக்குறுவிற்கு மீண்டும் ஒரு காலக்கெடுவை அறிவிக்கும். விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த அது கால நிர்ணயம் ஒன்றை வகுக்கும். இதைத் தவிர வேறு வழியில்லை. சூத்திரக்கிணற்று மாடுகள்போல எந்தச் சிங்கள அரசாங்கமும் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வதெல்லாம் இந்த யுத்தத்திற்கே. ✳

## பதுங்குகுழி நீ..... (சிறுகதை)

நாட்களுக்குப் பின்னர் நிலமை நன்றாக இருந்தமையால் நேற்றுப் பின்னேரம் பின்னுக்குச் சென்று அவளும் இன்னும் சிலரும் குளித்துவிட்டு வந்திருந்தனர். அவள் அணிந்திருந்த புதிய சீருடை அவளுக்கு அழகாகவே இருந்தது. உடுப்புத் தனக்கு நன்றாக அளவாக இருப்பதாக எல்லாரிடமும் சொல்லிக்கொண்டாள். உடுப்பைக் கசங்காமல் காப்பதற்குப் பெரும் பிரயத்தனப்பட்டாள். உடுப்பு அழுக்குப் படியாதவாறு பதுங்குகுழிக்குள் அவதானமாகவே சென்றாள். அவர்களுக்கு அவளைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது.

அவளது கலகலப்பும் பகிடிகளும் வழமைபோலவே இருந்தன. ஆனால் வெளியில் சத்தம் போட்டு ஓடித் திரிகின்ற நிலமையில் அப்போதைய சூழ்நிலை இருக்கவில்லை.

வேவு விமானத்தைத் தொடர்ந்து, எந்தப் பக்கமாக வந்து சேர்ந்தது என்று யோசிக்க முன்னரே 'கிபிர்' குண்டுகளைப் போடத் தொடங்கியது. எல்லோரும் நிலையெடுத்தவாறு இருந்தனர். பலத்த அதிர்வுடன் புகைமண்டலம் மேலெழுந்து, எந்த இடம், எந்தத் திசை எனத் தெரியாதவாறு இடத்தை மறைத்தது. இது, எதிரி முன்னேறப் போகிறான் என்ற அபாய அறிவிப்பை உணர்த்தியது.

எதிரியின் பீரங்கிகள் இரையத் தொடங்கின. அவை பேரிரைச்சலாக ஊழிக்காற்றின் ஊளையாக நெருங்கின. எல்லோரும் தயார் நிலையில் நின்றனர். ஆயுதங்கள் பேசத் தொடங்கின. அவ்விடம் ஓர்மமும் வேகமுமே முன்னின்றன. தொலைத் தொடர்புக் கருவிகள் இரையத் தொடங்கின. கட்டளைகள் கணத்துக்குக் கணம் வந்து கொண்டிருந்தன.

"எங்கட குருவி எங்கே? அட அங்க தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருக்குது"

அவளது கனரக ஆயுதம் முழங்கிக் கொண்டிருந்தது. எதிரியின் கனரக ஆயதங்கள் நெருப்பு மழை பொழிந்தன. ஏட்டிக்குப் போட்டியாய் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. ஒன்றுக்குப் பத்தாக பத்துக்கு நூறாகப் பல்கிப் பெருகின.

ஒருபுறம் கிபீர் விமானங்கள் இலக்கின்றி எழுந்தமானத்துக்கு குண்டுகளைத் தள்ளிச் சென்றன. காடுகளின் நீண்ட இடைவெளிக்கு ஒருவராக, இருவராக நிலையெடுத்து நடந்த சண்டை உக்கிரமானதாக, தலைநிமிர்த்த முடியாததாக இருந்தது.

மோட்டார் எறிகணை ஒன்று அவளது காலைப் பதம்பார்த்துவிட்டது. ஆ! அவர்களின் கலவாய்க்குருவியின் ஒரு கால் சிதைந்து தொங்கிக்கொண்டிருந்தது. இரத்தம் ஆறாக ஓடியது. அவளுக்குப் பக்கத்தில் நின்றவள் தொடர்ந்து சண்டை பிடித்துக்கொண்டேயிருந்தாள்.

சற்று தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தபோது, சடார் என்று வந்து வீழ்ந்த எறிகணை ஒன்றினால் தோழி வீழ்ந்தாள். எரிகுண்டு பட்டதோ....? ஒரு கைப்பிரதேசம் கருகி அப்படியே அவ்விடத்திலேயே கிடந்தாள்.

உந்த நிலையிலும் அவ்விடத்துக் காட்டுப் பாதை வழியாக இராணுவம் வரலாம். ஒருபக்கம் அவளுக்குக் கால் வலித்தது. அது தொங்கிக்கொண்டே இருந்தது. மெல்ல மெல்ல ஊர்ந்தவாறே அவளது தோழி வீழ்ந்து கிடக்கும் இடத்துக்கு வந்தாள். தொங்கிக்கொண்டிருந்த கால் மிகுந்த வேதனையைக் கொடுத்தது.

தனது கோல்சருக்குள் அவள் எப்போதுமே கத்தி வைத்திருப்பாள், மாங்காய் மற்றும் மரக்கறிகள், இளநீர் வெட்டுவதற்குப் பயன்படுத்தும் அவளது கத்தி அது. இப்போது ஒருகணம் நிதானித்து மறுகணம் தொங்கிக் கொண்டிருந்த காலைத் துண்டாக வெட்டினாள். ஒழுகிய இரத்தத்தைக் கட்டுப்படுத்த சாரத்தைக் கிழித்துக் கட்டுப்போட்டாள்.

"எப்படி? என்ர கால் வெள்ளையாய் இருக்குது" என்று தோழிக்குக் காட்ட, தோழி "கறுப்புக் காலில் குதிமட்டும் ஜொலிக்குது" என்று கேலிபண்ண, அவளது காலிலே மண் பூச தான் ஓடிக் கலைத்தது ஒருகணம் குருவியின் மனக்கண் முன் வந்து மறைந்தது.

மறுபடி ஊர்ந்தபடி கிட்டவந்து தோழியின் உடலைத் தொட்டுப் பார்த்து விட்டு, ஒரு கையால் அவளை இழுத்தபடியும் மறுகையில் துப்பாக்கியுடனும் ஊரத் தொடங்கினாள். தோழியின் உடல் மிகுந்த கனமாய் இருந்தது அவளுக்கு. நிழல் பிடிக்கும் காடுகள் ஊடே முட்கள் சிராய்த்தன. இன்னும் நிறையத் தூரம் போகவேண்டும். கால்கள் வலித்தன. பசியால் எழுந்த களைப்பு இன்னொருபுறமாக வாட்டியது. அடியடியாக ஊர்ந்து கொண்டே இருந்தாள். ஊர்ந்து ஊர்ந்து போய் அவர்களின் எல்லையில் தோழியின் உடலைச் சேர்த்தபின், குருவியின் முகத்தில் தோன்றிய சிரிப்பும் வெற்றிப் பெருமிதமும் மூன்று நாட்கள் வரை அப்படியே இருந்தன. அவளது இறுதிக் கணப் பொழுதுகளிலும் அதுவே நிரந்தரமாக.... அழியாத சிரிப்பாக....

இப்போது அந்த இடம் நெருப்பெரிந்த நிலமாக, நினைவகலாத இடமாக இருந்தது. இந்த வெற்றுரவைக் கோதுகள் குருவியினது துப்பாக்கி, எதிரிக்கு எதிராக நின்றபோது துப்பியவையாக இருக்க வேண்டும் என்று ஆரபி நினைத்தாள். அப்பகுதியின் பதுங்குகுழி மழை வெள்ளத்தில் நிறைந்திருந்தது. சேறும் அதற்குள் நின்று கத்தும் தவளைகளும் அந்த இடத்துக்கே நிரந்தரமானவை.

ஆரபியின் கைகள் அந்தப் பதுங்குகுழி மண்ணை ஆசையோடு துழாவின. சில கடதாசித் துண்டுகள் பிய்ந்து வந்தன, என்ன இது?

பிசுபிசுத்தபடி ஒரு பாண் துண்டு. இரண்டு மூன்றாய் பிய்ந்து நனைந்தவாறிருந்தது. அது அவர்களுக்கு இறுதியாக வந்த உணவாகத்தான் இருக்க வேண்டும். கடைசி நாள் கறிப்பாண் வந்ததாக ஆரபிக்கு ஞாபகம். அதேதான். குருவி அரைகுறையில் சாப்பிட்ட நிலையில் சண்டை பிடித்திருப்பாள். அல்லது எல்லாம் முடிந்து ஓய்ந்த பின்னர் வந்து சாப்பிடலாம் - என்று வைத்திருந்தாளோ?

இப்போது மழைத்துளிகள் பெரிதாக விழத்தொடங்கின. மழை நீர் கரைந்து, மேலும் மேலும் சிவப்பாகி, பதுங்கு குழியின் நீர் மட்டம் உயர்ந்தது. தவளைகளும் தேரைகளும் 'க்ளக் க்ளக்' என்றபடி துள்ளித் திரிந்து விழுந்தன. அது அவர்களின் கலவாய்க் குருவியின் சிரிப்பொலிபோல ஆரபிக்குத் தோன்றியது. காட்டு மரங்களின் இலைகள், மெல்ல மெல்ல விழும் மழை நீர் பட்டுச் சிலிர்த்தன. ✳

# ஆபத்தான தந்திரோபாயச் சிக்கலில் சிறீலங்காப் படைகள்

வடக்கு – கிழக்கு பெரும் பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. போரின் பெரும்பகுதி



முடிவடைந்துவிட்டது. விரைவில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படும். இதுவே சந்திரிகா அரசு வடக்கு – கிழக்குப் போர் தொடர்பாக வெளிக்காட்ட முனையும் விவரண மாகும். ஆனால், போர், முடியும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றதா அன்றி வடக்குக் கிழக்கின் பெரும்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தான் உள்ளதா? என்பதை இராணுவத்தின் நடவடிக்கைகளே கேள்விக் குறியாக்குபவையாக உள்ளமை தான் வேடிக்கையான விடயம். இதற்கு கிழக்கு மாகாணத்தில் இன்று நிகழும் சில சம்பவங்களை எடுத்துக்காட்ட முடியும்.

எடுத்துக்காட்டாக, மட்டக்களப்பு நகரத்தில் சிறீலங்கா அரசினாலோ அன்றி அதன் படையினாலோ சுதந்திர உற்சவங்களையும் குதூகல கொண்டாட்டங்களையும் நடத்த முடியாமல் போனதைச் சுட்டிக்காட்ட முடியும். அதாவது, இவ்விரு கொண்டாட்டங்களையும் விடுதலைப் புலிகளின் எறிகணை வீச்சுக்கு அஞ்சி படையினரால் நடத்த முடியாமற் போய்விட்டதென்பதே யதார்த்தமாகும். இது மறுவளமாக, விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு நகர மையத்தில் இருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ளனர் என்பதையே வெளிப்படுத்தும் ஒன்றாக உள்ளது.

அத்தோடு திருமலை நகரினதும், அதன் துறைமுகத்தின் பாதுகாப்புக் குறித்தும் சந்திரிகா அரசு தற்போது தீவிர முனைப்புக் கொண்டுள்ளது. இதன் காரணமாக நகரையும் துறைமுகத்தையும் மற்றைய பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் மீது பெரும் கெடுபிடிகளை அரசு கட்டவிழ்த்துள்ளது. அத்தோடு, திருமலை துறைமுகத்தினுள் கப்பல்கள், படகுகள் பிரவேசிப்பதற்கு



தடைகளை அரசு அறிவித்தும் உள்ளது. இந்த நிலையில், திருமலை நகரத்தினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் சிரமங்கள் எழலாம்

**கைப்பற்றிய நகரங்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது குறித்து பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ள இராணுவமும் அதன் அரசும் எவ்வாறு வடக்கு – கிழக்கின் பெரும் பகுதி தமது கட்டுப்பாட்டில் இருப்பதாயும், போர் விரைவில் முடிவிற்குக் கொண்டுவரப்படும் என்றும் கூறமுடியும்?**

என இராணுவத் தரப்பு கூறியுள்ளது.

இந்த வகையில் கைப்பற்றிய நகரங்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது குறித்து பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ள இராணுவமும் அதன் அரசும் எவ்வாறு வடக்கு – கிழக்கின் பெரும் பகுதி தமது கட்டுப்பாட்டில் இருப்பதாயும், போர் விரைவில் முடிவிற்குக் கொண்டுவரப்படும் என்றும் கூறமுடியும். ஆனால், அரசோ ஜெயசிக்குறு இராணுவ நட-

**ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் முடிவானது, போரின் முடிவு என்ற ரீதியிலேயே சிறீலங்கா பிரச்சாரம் செய்கின்றது. வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை தரைவழிப் பாதையைத் திறப்பதன் மூலம் புலிகளின் நடவடிக்கை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்? தரைவழிப் பாதை எவ்வாறு போரை முடிவுக்குக் கொண்டுவரும்?**

வடிக்கையின் முடிவானது, போரின் முடிவு என்ற ரீதியிலேயே பிரச்சாரம் செய்கின்றது. ஆனால் இது எத்தனை சாத்தியமானது? அதாவது, வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை தரைவழிப் பாதையைத் திறப்பதன் மூலம் புலிகளின் நடவடிக்கையை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்? தரைவழிப் பாதை எவ்வாறு போரை முடிவுக்குக் கொண்டுவரும்?

சந்திரிகா அரசு வடக்கிலும் கிழக்கிலும் சில கிராமங்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை வெற்றி கொண்டு விட்டதாக சிலசமயம் கூறமுனையலாம். இதனை சிறிலங்கா அரசுக்கு வேண்டியவர்களும் சிறிலங்காவை வேண்டியவர்களும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் போர் எதுவித தடையுமின்றி தொடர்வதாகவே கடைசி நிலைவரை நிச்சயம் இருக்கும். ஏனெனில் தமிழீழத்தில் பெரும் பரப்பு கிராமங்களாகவே உள்ளன. அத்தோடு கிராமங்களில் தமிழ் மக்களின் குடித்தொகை அதிகமாக இருக்கும். இந்த நிலையில் நகரங்களையும், வீதிகளையும் பிடிப்பதென்பதும், தரைப் பாதையைத் திறப்பதென்பதும் கடினமானது மட்டுமல்ல – தந்திரோபாய ரீதியிலும் ஆபத்தான தொன்றாக மாறக்கூடியதாக இருக்கும். ஏனெனில், இது சிலசமயம் அந்த நகரங்களையும் பொறி ஒன்றினுள் சிக்கவைப்பதாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ✳

## கொசோவோ - சுதந்திர நாடாக.....

கிரேக்க நாடும், துருக்கியும் கூட குறுக்கிடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இந்த பிரதேச ரீதியான யுத்தத்தை தடுப்பது மட்டும் மேற்கு நாடுகளின் ஒரே காரணமாக இருக்கவில்லை. செர்பிய வன்முறை அதிகரித்து இதன்மூலம் கொசோவோ பிரிந்து சென்று ஐரோப்பாவில் முதலாவது முஸ்லிம் நாடொன்று உருவாவதையும் அவை விரும்பவில்லை. இதனால் செர்பியா மீது சர்வதேச அரசியல், மற்றும் பொருளாதார அழுத்தங்களைப் பிரயோகிக்கும் மேற்கு நாடுகள் யூகோஸ்லாவியாவின் அமைப்புக்குள் சுயாட்சி அந்தஸ்த்தை ஏற்றுக் கொள்ளும்படி கொசோவோ அல்பேனியரை கேட்டு வருகின்றனர். ஆனால் இவ் அந்தஸ்து காலங்கடந்து வந்த சொற்ப சலுகையா என்பதை கொசோவோ அல்பேனியரே தீர்மானிக்க வேண்டும். ✳

## வெகுமதி

கொதிக்கும் வெயிலையும் –
குடைபிடித்துப்போன மனிதனையும்
– குடையையும், மின்கம்பம் வைத்த
கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே
இருந்தது.
'என்ன உலகம்' என்று
தனக்குள்ளேயே அது சலித்துக்
கொண்டது.
பெருமூச்சோடு மின்கம்பம்
சொல்லியது:–
*'நிழல் கொடுக்கும்*
*குடைக்கு வெயில்'*



*– காசிஆனந்தன்*
*கதைகளிலிருந்து–*

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)



யூதக் கடைகளை உடைத்து, யூதர்களின் தாடிகளை அறுத்தெறியும் காடையர்களின் சீற்றங்களை அவர் அறிந்திருந்தார்.

ஆகவே ஜோஹான் கிறமென்றும், மெண்டல் லண்டவ்வும் வேறு வேறான முடிவுகளுக்கு வந்தார்கள். ஏழு நூற்றாண்டுகள் போலந்தில் இருந்த பின்னும் மெண்டல் லண்டவ் ஒரு இடைஞ்சல் செய்பவராகவே இப்பவும் கணிக்கப்பபட்டார். அது அவருக்கும் தெரிந்தேயிருந்தது.

அவர் ஒரு எளிமையான மிதவாதப் போக்குடைய மனிதர். அவருடைய மனைவியான லியா மிக எளிமையான ஒரு பெண்ணாய் இருந்ததோடு, கடுமையான உழைப்பாளியாகவும், அர்ப்பணிப்புள்ள தாயாகவும், மனைவியாகவும் திகழ்ந்தாள்.

மெண்டல் லண்டவ் தன் பிள்ளைகளுக்கு மரபுரிமையாக (Heritage) ஏதாவது கொடுக்க விரும்பினார். அவரிடம் ஹாசிடிம் ஜெப தபங்களுக்கான வேகமோ, இரட்சகர்களில் விசுவாசமோ, அல்லது கபாலாக்களின் எண் சாத்திரத்தில் நம்பிக்கையோ இருக்கவில்லை.

அவர் தனது மதத்தில் ஓரளவு விசுவாசம் வைத்திருந்தார். அவர் யூத விடுமுறை தினங்களைக் கிறிஸ்தவர்கள் ஈஸ்டரையும், நத்தாரையும் கொண்டாடுவதுபோல் கொண்டாடினார். அவர் பைபிளைத் தனது இனத்தவரின் வரலாற்றுப் பதிவேடாக மதிப்புக் கொடுத்தாரேயல்லாமல், வழிபாட்டுக்கான அடிப்படையாகக் கொள்ளவில்லை. ஆகவே தனது குழந்தைகளுக்கு ஆழமாக வேரூன்றிய மதத்தைக் கூடக் கொடுக்க முடியவில்லை.

மெண்டல் லண்டவ் தன் பிள்ளைகளுக்குக் கொடுத்ததெல்லாம், ஒரு குறிக்கோள்தான். அது தொடர்பற்றதும் கனவு போன்றதும் நிறைவேறக் கூடாத தொன்றாகவும் இருந்தது. அவர் யூதர்கள் ஒரு நாள் பலஸ்தீனம் திரும்பித் தங்கள் புராதனமான நாட்டை மீள ஸ்தாபிக்க வெண்டும் என்ற குறிக்கோளையே, தன் பிள்ளைகளுக்குக் கொடுத்தார். சுதந்திரமான ஒரு நாட்டின் பிரஜைகளாகவே அவர்கள் சம உரிமையை அடைய முடியும்.

மெண்டல் லண்டவ் கடுமையாக உழைக்கும் ஒரு பேக்கரி உரிமையாளனாவார். அவரது உலகம், தனது குடும்பத்தினருக்கு உணவளிப்பதையும், அவர்களுக்கு அன்பு, இல்லிடம், கல்வி, உடுதுணி அளிப்பதை மட்டுமே கொண்டிருந்தது. அவர் தனது அட்டகாசமான கனவுகளில் கூடப் பலஸ்தீனத்தைக் காண்பேன் என்றோ, தனது பிள்ளைகள் பலஸ்தீனத்தைக் காணக்கூடும் என்றோ நம்பவில்லை. ஆயினும் இந்தக் குறிக்கோளில் விசுவாசம் வைத்திருந்தார்.

போலந்து யூதர்கள் இடையே மெண்டல் இந்த விடயத்தில் தனியாக இருக்கவில்லை. போலந்தின் 35 இலட்சம் யூதர்களில் நூறாயிரக் கணக்கானவர்கள் இந்த நம்பிக்கை நட்சத்திரத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களிடையே முளைவிட்ட கோட்பாடுதான் சியோனிஸம் (zionism) என்பது. மதவாத சியோனிஸ்டுகள், தொழில் ரீதி சியோனிஸ்டுகள், சிறிய அளவிலான இராணுவ ரீதி சியோனிஸ்டுகள், நடுத்தர வகுப்பு வர்த்தக ரீதி சியோனிஸ்டுகள் போன்றோர் இருந்தார்கள்.

மெண்டல் தொழிற் சங்கவாதியாக இருந்தமையால், அவரது குடும்பத்தினர் மீட்பாளர்கள் (Redeemers) என்று தங்களை அழைத்துக்கொண்ட தொழில்ரீதி சியோனிஸ்ட் குழுவில் இணைந்திருந்தனர். லண்டவ்வின் முழுச் சமூக வாழ்க்கையும் மீட்பாளர்களைச் சுற்றிச் சுழன்றது. காலத்துக்குக் காலம் பலஸ்தீனத்தில் இருந்து பேச்சாளர்கள் வந்தனர். ஆட்களைத் தெரிந்தெடுக்கும் வேலை இருந்தது. புத்தகங்கள், பிரசுரங்கள், கலந்துரையாடல்கள், பாட்டுக்கள், நடனங்கள், தாயகக் கோட்பாட்டைச் சாகவிடாமல் வைத்திருக்கும் முடிவில்லாத நம்பிக்கை என்பன இருந்தன. மீட்பாளர்கள், மற்ற சியோனிஸ்ட் குழுக்களைப் போலவே, ஆண், பெண் பிள்ளைகளைப் பயிரிடுதலில் பயிற்றுவிக்கும் நோக்கில் மாதிரி விவசாயப் பண்ணைகளை நடத்தி வந்தார்கள். அடிக்கடி புதிதாக வாங்கப்பட்ட நிலங்களைப் பண்படுத்த மீட்பாளர்கள் குழுக்களைப் பலஸ்தீனத்துக்கு அனுப்பி வந்தார்கள்.

லண்டவ் குடும்பத்தில் ஆறு அங்கத்தவர்கள் இருந்தனர். மெண்டல், அவர் மனைவி லியா ஆகியோர் இருந்தனர். பேக்கரித் தொழிலில் தேர்ச்சி பெற்றிருந்த அவரது 18 வயது கட்டுமஸ்தான மூத்த மகனான மண்டெக் இருந்தான். மன்டெக் இயற்கையாகவே தலைமைத்துவப் பண்புகளைப் பெற்றிருந்தான். அத்தோடு மீட்பாளர்களின் பிரிவுத் தலைவர்களில் ஒருவனாகவும் விளங்கினான். இரு பெண்பிள்ளைகளும் இருந்தனர். றுத் என்ற 17 வயது மகள் லியாவைப் போலவே மிகவும் நாணம் கொண்டவள். அவள், மீட்பாளர்களின் பகுதித் தலைவர்களில் ஒருவனாக இருந்த ஜான் மீது காதல் கொண்டிருந்தாள். ரெபேக்காவுக்குப் 14 வயது. அடுத்து, குடும்பத்தின் இளையவனாக டொவ் இருந்தான். அவன் 10 வயதுடையவனாகவும், அகன்ற விழிகளை உடையவனாகவும், சிவந்த கூந்தலை உடையவனாகவும், மீட்பாளர்களில் அங்கம் வகிப்பதற்கு வயது காணாதவனாகவும் இருந்தான். அவன் தனது மூத்தவனாக இருந்த மண்டெக்கை மிகவும் மதித்தான். அதேபோல் மண்டெக்கும் அவனை ஊக்குவிப்பதுபோல், கூட்டங்களுக்குத் தன்னோடு கூட அவனைத் தொடர்ந்து வர அனுமதி அளித்தான்.

*புரட்டாதி 1, 1939*

எல்லைப்புற சம்பவங்கள் சிலவற்றை உருவாக்கிய பின் ஜெர்மனி போலந்துக்குள் படையெடுத்தது. மெண்டல் லண்டவ்வும், அவரது மூத்த மகனான மண்டெக்கும் இராணுவத்தில் இணைந்து கொண்டனர்.

26 நாட்கள் மட்டும் நடந்த போரில், ஜெர்மனி இராணுவம் போலந்தைச் சின்னாபின்னமாக்கியது. மென்டல் லண்டவ்வும் போலந்து இராணுவச் சீருடையில் போரிட்ட முப்பதினாயிரம் யூதர்களும் போரில் கொல்லப்பட்டனர். இது ஆபத்துக்களின் காலமாக இருந்ததால் நீடித்த துக்கம் கொண்டாடுதல் நிகழ்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. லன்டெவ், வீரமான ஆனால் தோல்வியில் முடிந்த வார்சோவை பாதுகாக்கும் முயற்சியின் பின் மண்டெக் குடும்பத் தலைவனாக பொறுப்பேற்றுக் கொண்டான். அதே வேளை ஜெர்மனியர்கள் வார்சோவிற்குள் நுழைந்தனர். எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து, மீட்பாளர்கள் கூடி ஆராய்ந்தனர்.

அதிகமான போலந்து யூதர்கள் தங்களுக்கு எதுவும் நிகழாது என்ற உண்மைக்குப் புறம்பான நம்பிக்கையில், பொறுத்திருந்து, பார்ப்போம் என்ற மனப்பான்மையில் வாழ்ந்தனர். மீட்பாளர்களும், போலந்து பூராவுமிருந்த மற்றைய சியோனிஸ்ட் குழுக்களும் இவ்வளவு மெத்தனமாக இருக்கவில்லை. ஜெர்மன் ஆக்கிரமிப்புத் தொடர்ந்தால், தங்களுக்கு ஆபத்துக் காத்திருக்கிறது என அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

**லியோன் யூரிஸ்**

தொடரும்...

> நம்பிக்கை வைத்து ஆயிரக்கணக்கான மைல்கள்,
> கால்நடையாக, பனிமலைகளூடாக,
> பாலைவனங்களூடாக, ஆறுகள், கடல்கள் கடந்து
> யாக்கோப்பின் மைந்தர்கள் – யூத மக்கள் தாயகம்
> நோக்கி வருகின்றார்கள்.


## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் உங்கள் சிந்தனையில் எழும் கருத்துக்களை கவிதை வடிவில் தாருங்கள். உங்கள் ஆக்கங்களை 22- 05 - 1998 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

எழுக தமிழா...

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:
'Kalathil',
Eelam House, 202Long Lane, London SE1 4QB.

## சிறுகதை



தலை நிமிரமுடியாமல் எதிரி ஏவிய எறிகணைகளால் காடு அதிர்ந்து குலுங்கிக் கொண்டிருந்தது. ஒன்று வெடித்த நொடிப் பொழுதுக்குள் அடுத்தது, அடுத்தது என இடைவிடாதபடி சில ஒரே இடத்திலும் சில தூரப்போயும் வெடித்துச் சிதறின. பச்சைமரங்கள் வெம்மையுடன் அவிந்து கருகிய மணம் அப்பிரதேசமெங்கும் நிறைந்தது. பசுமையாகப் படர்ந்திருந்த புற்கள் கருகியும், கருகிய புற்களின் மேல் சுழலாய் எழுந்த புகை மண்டலத்தின் கரிபடர்ந்தும் அவ்விடம் சுடுகாடுபோலக் கிடந்தது. முறிந்த மரங்கள் ஒரு புறம். எறிகணைத் துண்டுகளாற் குத்திக் கிழிக்கப்பட்ட பச்சை மரங்கள் இன்னொரு புறமாக அவ்விடம் கொடூரக் காட்சி ஒன்றின் உச்சநிலைக்குச் சாட்சியாய் விளங்கியது.

மண் மூட்டைகள் கொண்டு மூடப்பட்ட பதுங்கு குழிகளின் மேல் அதன் அருகில் வெடித்த எறிகணைகள் மண்வாரிக் கொட்டியிருந்தன. சில நாட்களுக்கு முன் அவ்விடத்தில் பெரியதொரு சண்டை நடந்ததற்கான அடையாளங்களாக வெற்று ரவைக் கோதுகளும், எறிகணைகள் வீழ்ந்து குழி தோண்டிய பள்ளங்களும், இரத்தக்கறை படிந்து காய்ந்துபோன சுவடுகளும் அவ்விடத்தின் அசாதாரணமான பயங்கர நிலையினைக் காட்டியது. தாறுமாறாய் முறிந்து சரிந்தபடி கிடக்கும் பச்சை மரங்களைப் பார்க்கும் போது ஆரபிக்கு மிகுந்த கவலையாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக இயற்கை வளங்கள், வயல்கள், பூத்துக் குலுங்கி காய் பிஞ்சாய் இருக்கின்ற தோட்டங்கள் என்பனவற்றையெல்லாம் எதிரி சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்ற அவலத்தைக் காணும்போது ஆரபிக்கு மனதைப் பிசைந்தது.

வன்னி மண்ணின் ஆழ வேரோடிய காட்டுமரங்கள் பாதை நீளமும் குடைபிடிக்கும். அதற்குள்ளால் எப்பக்கமும் எதிரி ஊடுருவுவான் என்று கண்கொத்துப் பாம்பாய் காவலிருந்து இரவின் நீண்ட பொழுதுகளில் அவர்கள் விழிகள் சிவந்துகொள்ளும். பொழுது மங்கும் போது ஓயாமல் சிணுங்கும் நுளம்புகளை விரட்டினாலும், சுற்றிச் சுற்றி வந்து மாயவித்தை காட்டி ஊசியாகக் குத்தும் அவைகளிடமிருந்து தப்பிச் சொற்ப நேரம் நித்திரைக்காகப் போராடி, அரைகுறைத் தூக்கத்தில் விழித்து, தலைமாட்டில் வைத்திருந்த துப்பாக்கியைத் தடவிச் சரிபார்த்து...... அந்தக் கணங்களிலெல்லாம் அவர்களின், 'அவள்' அவர்களுடன் இருந்தாள்.

பதுங்குகுழிக்குள் மழை வெள்ளம் நிரம்பியிருந்தது. 'க்ளக், க்ளக்' என்றவாறு தவளைகளும் பேத்தைகளும் இன்னும் பெயர் தெரியாத பூச்சிகளும் மிதந்து சிக்குண்டு வந்து முழங்காலுக்கு மேலாக வெள்ளம் நிறைந்தபோதும், அந்த நாட்களில் 'அவள்' அவர்களுடன் தான் இருந்தாள். எல்லோருக்கும் விருப்பமுடைய ஒருத்தியாக இருந்தாள்.

"கலவாய்க்குருவி" என்று அவர்கள் அவளுக்குப் பொருத்தமாகவே பெயரையும் வைத்திருந்தனர். எந்த நேரமும் ஓயாமல் எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பாள். அமைதியாக, எதுவித ஆரவாரங்களும் காட்டாது இருக்கவேண்டிய நேரங்களில் அவள் தனது சிரிப்பினையும், கதைக்கவேண்டி உதடுகள் வரை வருகின்ற வார்த்தைகளையும் அடக்குவதற்குப் படுகின்ற பாட்டை நினைக்க அவர்களுக்கு அடங்காத சிரிப்பு வரும். கைகளால் வாயைப் பொத்திச் சிரிப்பை அடக்கி, மூச்சுமுட்டி நிற்கையில் சிரிப்பில் கண்களில் நீர் முட்டும்.

வியர்வை வழியப் பதுங்குகுழி வெட்டி மண்மூட்டை அடுக்கி ஓயாத வேலையிலும் வருகின்ற களைப்பு இருந்த இடம் தெரியாமல் போய்விடும். காணுகின்ற, பேசுகின்ற நேரமெல்லாம் அவள் ஓயாமல் சிரித்தபடி மற்றவர்களையும் சிரிக்க வைத்தாள். அவளுக்குள் எப்படித்தான் சிரிக்க வைக்கக் கூடிய கதைகள் குறையாமல் ஏராளமாக இருந்தனவோ?

அந்தக் கணங்களிலெல்லாம் ஓயாமல் ஒவ்வொரு நாட்களும் எறிகணைகள் வந்து வீழ்ந்தன. எதிரி முன்னேறுவதும் பின்வாங்குவதும் அவர்கள் முற்றுகையிட்டுத் தாக்குவதுமாக சண்டைகள் நடைபெற்றன. அவள் இருக்கும் போது எதுவுமே கடினமாகத் தெரிவதில்லை. எங்கேயோ எல்லாம் திரிந்து, எதிரிக்கு அண்மையாகவுள்ள இடங்களுக்கெல்லாம் சென்று மணம் பிடித்து, மாங்காய் பிடுங்கி வருவாள், இன்னொருநாள் மரவள்ளிக் கிழங்கு கிண்டி வேர்களில் முற்றிய கிழங்குகள் தொங்க குலைபோலக் கொண்டு வந்து போட்டு வெட்டி அவிப்பாள். எல்லோரும் அடித்துப் பறித்து உண்டு மகிழ்ந்த அந்த நிமிடங்களிலெல்லாம் எதிரி ஏவிய எறிகணைகள் இடைக்கிடை வந்து விழுந்தன. மரவள்ளித் தோட்டங்களும், கத்தரிப் பாத்திகளும் கருகிப் போயின். யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை திறப்புக்கான போர்க்களம் கிராமத்தின் ஒவ்வொரு வீடுகளிலுமே ஜெயசிக்குறு பற்றிய விமர்சனங்களை உண்டு பண்ணியிருந்தது.

அது இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கையின் ஆரம்ப நாள், அவர்களெல்லோரும் ஆயத்தமாகவே இருந்தார்கள். அமாவாசை நாட்களும், நிலவு நாட்களும் தேய்பிறை வளர்பிறை நாட்களும் மாறி மாறி வந்தன. அது ஒரு முன்நிலவு நாளாகத்தான் இருக்க வேண்டும். குடை பிடிக்கும் மரங்களின் கீழே இலைப் பொட்டுக்களாக நிலவுக் கதிர்கள் ஊடுருவின. காட்டில் எறித்த நிலவு அழகாக இருந்தது. ஆங்காங்கே நீர் தேங்கிய குட்டைகளிலும் நீர் நிரம்பிய பதுங்குகுழிகளிலும் நிலவின் விம்பம் சலனப்பட்டுத் தெரிந்தது.

அவர்களின் கலவாய்க்குருவி காவற் கடமையை முடித்துவிட்டு வந்துவிட்டாள்.

"இனிப் பாட்டும் கூத்தும்தான்".

தோழி ஒருத்தி கூறினாள்.

காவற்கடமை நேரங்களில் எப்படித் தான் வாயை அடக்கி வைத்திருந்தாளோ? அது அவளுக்குத்தான் வெளிச்சம்.

நிலவு இரவின் அமைதியைக் கலைத்தது. அவள் பாடல் மெல்லக் கலகலப்பை ஊட்டியது. போராட்டப் பாடல்களுள் அவளுக்குத் துள்ளல் இசையில் அமைந்த பாடல்கள் தான் பிடிக்கும். அவை அவளது வாயில் சுலபமாக நுழைந்து கையின் தாளத்துக்கமைய ஒலிக்கும். இடையிடையே ஒலிபெருக்கியில் ஒலிபரப்பாளர் ஒலிபரப்புவதுபோல் தானே ஒலிபரப்புச் செய்து, வாயினால் வாத்திய இசை போட்டு அவர்களைச் சிரிக்கவைத்த நாட்களும், அந்த நாட்களிலும் முன்நிலவின் குளிர்ந்த ஒளிக்கதிர்கள் பொட்டுப் பொட்டாய் தரையைத் தொட்டன.

அது நெருப்பள்ளித் தின்ற களமாக இருந்தது. அந்தப் பின்னிரவில் எதிரி விட்ட தேடொளி ஒளிப்பந்தாக உயரத்தோன்றி கீழே வந்து அந்தக் கரிய இரவையும் பகலாக்கியது. கருமை நிழலாகக் குவிந்திருந்த காடுகள் ஒளிபெற்று மீண்டும் பழைய நிலைக்கு வந்தன. காட்டில் வெளியே உலாவிய விலங்குகள் பற்றைகளுக்குள் ஓடி ஒளிந்தன. அவற்றினது கண்கள் வெளிச்சம்பட்டு நெருப்புக் கோளங்களாக மினுமினுத்தன.

அதனைத் தொடர்ந்து அவ்விடம் எறிகணையால் அதிர்ந்தது. மண் துகள்கள் அள்ளுண்டு சிதறின. எறிகணைகள் அடுக்கடுக்காய் வீழ்ந்து குழிகளைத் தோண்டின. அடுத்த நாள் அசாதாரண நிலமையாகத் தான் இருக்கப் போகிறதோ!


அவைகள் எச்சரிக்கை ஒலிகளாகப் பட்டன.

"நாளைக்கு அவன் முன்னேறக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கு. எல்லோரும் கவனமாய்த் தயாராய் இருங்கோ".

கட்டளைகள் வந்தன.

நிலம் விடிகையிலேயே வேவு விமானம் சுற்றத் தொடங்கியது.

"முன்னுக்கு முழுவியளம் மாதிரி உது வந்திட்டுது. எங்கட பிளான் எல்லாம்



பிழைச்சுப்போட்டுது".

கலவாய்க் குருவி புறுபுறுத்தாள். சில

சண்டை உக்கிரமானதாக, தலைநிமிர்த்த முடியாததாக இருந்தது.
வந்து விழுந்தது மோட்டார் எறிகணை ஒன்று. ஆ....!
அவளின் ஒரு கால் சிதைந்து தொங்கிக்கொண்டிருந்தது. இரத்தம் ஆறாக ஓடியது.
தனது கோல்சருக்குள் இருந்த கத்தியை எடுத்து வேங்கைக்கே உரிய பொறுமையுடனும் எதையும் தாங்கும் இதயத்துடனும் அவள் செயற்பட ஆரம்பித்தாள்!

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# கொசோவோ - சுதந்திர நாடாகப் பரிணமிக்குமா?

யூகோஸ்லாவியாவின் தென்பகுதி மாகாணமான கொசோவோவில் அண்மையில் 80 பேருக்கு மேற்பட்டோர் செர்பியப் பொலிசாரினால் கொல்லப்பட்ட சம்பவமானது பால்கன் பிரதேசத்தில் மீண்டும் பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை யூகோஸ்லாவிய அதிகாரிகளால் கொசோவோவில் உள்ள அல்பானிய இனத்தவர் மீது நடாத்தப்பட்ட கொடூரமான அடக்குமுறை நடவடிக்கைகள் மேற்குலக நாடுகளை விசனப்பட வைத்துள்ளன.

பால்கன் பிரதேசத்தைப் பொறுத்தவரை கொசோவோவானது ஒரு வெடிமருந்துக் கிடங்காகவே கணிக்கப்படுகிறது.

1.9 மில்லியன் மக்களை மட்டுமே கொண்டுள்ள இம் மாகாணத்தவரிடையே நீண்ட காலமாக சுதந்திர வேட்கை கனன்று கொண்டு வந்துள்ளது. செர்பியப் பொலிசாரின் இவ் அடக்குமுறை நடவடிக்கைகள் இவ் வேட்கைக்குத் தூபமிடுவதாக அமையப் போகின்றன என ஐ.நா. சபையும் மேற்கு நாடுகளும் கவலை கொண்டுள்ளன.

யூகோஸ்லாவியாவின் ஏனைய முன்னாள் மாகாணங்களான ஸ்லோவேனியா, குரோசியா மற்றும் பொஸ்னியா–கெர்சகோவினா என்பன தனித்தனி நாடுகளாகப் பிரிந்து சென்றபோது இடம்பெற்ற போர் நடவடிக்கைகள் பெரிதும் பாரிய யூகோஸ்லாவியாவின் எல்லைக்குள்ளேயே இடம்பெற்றன. ஆனால், கொசோவோவில் இவ்வாறான போர் ஒன்று ஆரம்பிக்குமாயின் அயல் நாடுகளும் இதில் பங்குபற்ற நேரிடலாம் என்றும் இதனால் இது சர்வதேசப் பிரச்சனையாகப் பரிணாமம் பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன எனவும் மேற்கு நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.

மார்ச் மாதத்தின் ஆரம்பத்தில் (5ஆம் திகதி) யூகோஸ்லாவியாவின் செர்பியப் படைகள் கொசோவோவில் உள்ள அல்பானியர் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தினர். கொசோவோவின் தலைநகரான பிறிஸ்டினாவிற்கு மேற்கே 24 கி.மீ தொலைவில் அமைந்துள்ள பிரகஸ் எனும் மலைப் பிரதேச கிராமம் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் தாங்கிகளும், தாக்குதல் உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டன. இத் தாக்குதலின்போது செர்பியப் படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததோடு, பல வீடுகளையும் தீக்கிரையாக்கினர்.

இரண்டு நாள் இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து 5000க்கும் மேற்பட்ட அல்பேனிய இனத்தவர் இடம்பெயர நேரிட்டதாகவும் அவர்களில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காடுகளில் தஞ்சம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

'பயங்கரவாதத்தை' இல்லாதொழிப்பதற்கே இத் தாக்குதல் நடவடிக்கை நடாத்தப்பட்டதாக யூகோஸ்லாவிய சனாதிபதி மிலோசவிச் அறிவித்திருந்தார். கொசோவோவாவில் உள்ள "கொசோவோ விடுதலைப் படையினரைக் குறிவைத்தே இத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் இப் படையைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும் அரச தரப்பினர் அறிவித்துள்ளனர். குறிப்பாக, ஜசாரி குடும்பத்தினர் 24 பேர் கொல்லப்பட்டதாகவும் அவர்களில் விடுதலைப் படையின் தலைவரான அடம் ஜசாரியும் உள்ளடங்குவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, கொசோவோ விடுதலைப் படையினைச் சேர்ந்த மேலும் 30 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அறிய வருகிறது.

கொசோவோ விடுதலைப் படையின் சில குடும்பங்கள் முற்றாக அழிக்கப்பட்டிருந்தாலும் இவ் இயக்கத்தின் ஏனைய போராளிகள் இப் பிரதேசத்தின் மறு பகுதிகளுக்குக் கலைந்து சென்றுவிட்டதாகவும் புதிய கெரில்லா அணிகளை உருவாக்கி வருவதாகவும் செய்மதிப் படங்கள் தெரிவிப்பதாக அமெரிக்க வட்டாரங்கள் அறிவித்துள்ளன. இதேவேளை இவ் விடுதலைப் படையினர் அல்பேனியாவின் வடக்கில் இராணுவப் பயிற்சி பெற்று வருவதாகவும் ஏனைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

செர்பிய படைகளின் தாக்குதலைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொண்டு இடம்பெறாதவாறும் ஏனைய நாடுகளுக்குப் பரவாதவாறும் சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என மேற்கு நாடுகள் கூக்குரல் எழுப்பின. எனினும் தனது நடவடிக்கை உள்நாட்டு விவகாரம் என்றும் சர்வதேச நாடுகள் இதில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்றும் செர்பிய அரசு அறிவித்தது.

இராசதந்திர அல்லது இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் அதிகரித்ததனைத் தொடர்ந்து தற்போதைய வன்முறைகளுக்கு யூகோஸ்லாவிய சனாதிபதி மிலோசவிச் பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறிய அமெரிக்க இராசாங்க அமைச்சர் மடலின் பிறயிற் "இவ் வன்முறை தொடர்வதை அமெரிக்கா பொறுத்துக் கொள்ளாது" என்றும் எச்சரித்தார்.

"பொஸ்னியாவில் செர்பிய அதிகாரிகள் தொடர்ந்தும் செய்ய முடியாதவற்றை கொசோவோவில் செய்ய அனுமதிக்க முடியாது" என்றும் அவர் தொடர்ந்து கூறி முடித்தார்.

யூகோஸ்லாவியாவின் தென்மாகாணமான கொசோவோவிற்கு தென் எல்லைகளாக அல்பேனியா மற்றும் மசிடோனியா என்பன அமைந்துள்ளன. இதனால் கொசோவோவில் 90 வீதமானோர் அல்பேனிய இனத்தவராக விளங்குகின்றனர். யூகோஸ்லாவியாவின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த செர்பியர் தொகை 200,000 அளவிலேயே உள்ளது.

ஆனால், செர்பியரைப் பொறுத்தவரை கொசோவோ ஒரு முக்கியமான பிரதேசமாகும். இப் பிரதேசம் காலாகாலமாக 'செர்பிய தேசியவாதத்தைக்' குறிப்பதாக விளங்கி வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. தமது செர்பிய பழைமைவாத நாகரீகம் இப் பகுதியிலேயே செழித்து வளர்ந்ததாக செர்பிய தேசியவாதிகள் உரிமை கோருகிறார்கள்.

இவ் இரு இனங்களுக்கிடையிலான குரோதம் நீண்ட கால வரலாற்றைக் கொண்டது. செர்பிய 'நாகரீகத் தொட்டில்' என அழைக்கப்பட்ட இப் பகுதியில் உள்ள 'கரும்பறவைகளின் வெளி' எனும் இடத்தில் வைத்து செர்பிய இளவரசர் லாசர் என்பவர் 1389இல் ஒட்டமன் சாம்ராச்சியத்தின் துருக்கிய படைகளினால் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து செர்பியா 500 வருட காலமாக துருக்கிய முஸ்லிம் ஆளுமையின் கீழ் இருந்து வந்தது.

செர்பிய இளவரசர் சரணடைவதற்குப் பதிலாக மரணத்தைத் தழுவியமை, அந்நிய அடிமைத்தனத்திற்கு செர்பியர் அடிபணிவதில்லை எனும் கருத்தை உணர்த்தி வந்ததுடன் வரலாற்று ரீதியான அடக்குமுறையையும் ஞாபகப்படுத்தி வந்தது. இதனால் இவ் இராணுவத் தோல்வியானது அன்று தொடக்கம் செர்பியரிடையே ஒரு தேசிய கொண்டாட்டத்துக்கான காரணத்தைத் தோற்றுவிப்பதாகவே அமைந்துவிட்டது.

இதேவேளை 1987ல் இதே கொசோவோவில் மிலோஸ்விக் செர்பிய தேசியவாத உணர்வுகளைத் தூண்டியதை அடுத்தே 1991 அளவில் யூகோஸ்லாவியா பிளவுபட வேண்டிய நிலைமை உருவானது என்பது கவனிக்கத்தக்கது.

மேலும் எந்த அளவுகோலின்படி பார்த்தாலும் யூகோஸ்லாவியாவில் உள்ள மாகாணங்களில், கொசோவோவில் உள்ள அல்பானியருக்கே பூரண சுதந்திரம் கோருவதற்கான மேலதிக காரணங்கள் இருப்பதைக் காணலாம்.

அதாவது ஸ்லோவேனியர், குரோசியர் அல்லது பொஸ்னியாவில் உள்ள முஸ்லிம்களை விடவும் கொசோவோ அல்பானியரின் சுதந்திர கோரிக்கை நியாயபூர்வமானது எனக் கூறலாம்.

- சாள்ஸ் தேவசகாயம்

யூகோஸ்லாவிய கூட்டமைப்பு உருவாவதற்கு ஸ்லாவிய பரம்பரை, மொழி மற்றும் வரலாற்றுக் காரணிகள் என்பன அடிப்படையாக அமைந்தன. கொசோவோவில் உள்ள அல்பானியரோ இவை எல்லாவற்றிலும் வேறுபட்டவராகவே விளங்குகின்றனர்.

கொசோவாவில் உள்ள 90 வீத அல்பானியரில் பெரும்பான்மையானோர் முஸ்லிம்கள் என்பதுடன் மத்திய தரைக்கடல் பிரதேச பரம்பரையைக் கொண்டவர்கள் என்பதும் என்பதும் கவனிக்கத்தக்கது. இக் கொசோவோ பிரிவினைவாதமானது 1950களில் மார்ஷல் டிட்டோவின் கீழ் கொடூரமாக நசுக்கப்பட்டது. ஆனால் 1974ல் யூகோஸ்லாவியாவின் புதிய அரசியலமைப்புச் சட்டம் இப் பிரதேசத்திற்கு கணிசமான அளவு சுயாட்சியை வழங்கியபோது அரசாங்கம் மற்றும் நீதி பரிபாலனத் துறையில் புறம்பான அதேசமயம் சமாந்தரமான அமைப்பொன்றை கொசோவோ மக்கள் தமக்கென உருவாக்கிக் கொண்டனர்.

கொசோவோவில் உள்ள சேர்பியரின் குறைகளை அறியும் வண்ணமாக 1987ல் மிலஸ்விக் அம் மாகாணத்திற்குச் சென்றபோது 'உங்களை ஒருவரும் தோல்வி அடையச் செய்ய முடியாது' என முழக்கமிட்டார். இந்தச் சம்பவத்தினையும், உரையையும் அடுத்து மிலஸ்விக்குக்கான ஆதரவு அதிகரித்து அன்றைய செர்பிய சனாதிபதியை இவர் அகற்றக் கூடியதாக




அமைந்தது.

கொசோவோ அல்பானியருக்கிருந்த சுயாட்சி சலுகைகள் 1989ல் மில்ஸ்விக்கினால் ரத்துச் செய்யப்பட்டதுடன் பாராளுமன்றமும் கலைக்கப்பட்டு பெல்கிறேடில் இருந்து நேரடி ஆட்சி நடைபெறுகின்றது.

இவ் சுயாட்சி அந்தஸ்து நீக்கப்பட்டதனை அடுத்து செர்பிய ஆட்சிக்கெதிராக பல ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்பணிகள் என்பன நிகழ்த்தப்பட்டன. கொசோவோ விடுதலைப் படை உருவாகியதை அடுத்து கடந்த வருடத்தில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்தன.

பொஸ்னியா மற்றும் குரோசியாவில் இருந்து வந்த பல்லாயிரக்கணக்கான செர்பிய அகதிகள் பலவந்தமாக கொசோவாவில் குடியமர்த்தப்பட்டாலும் பாரிய அளவில் செர்பியரைக் குடியமர்த்த எடுத்த முயற்சி வெற்றிபெறவில்லை என்றே கூறவேண்டும். எனினும் தற்போது சுமார் 20,000 செர்பிய பொலிசாரும் படையினரும் கொசோவாவில் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

கொசோவாவில் யுத்தம் ஆரம்பமாகினால் பெருந்தொகையான அல்பேனிய இனத்தவர் மசிடோனியாவிற்குப் படையெடுப்பர். மசிடோனியாவிலும் கணிசமான அளவு அல்பானிய இனத்தவர் உள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. இதேவேளை தனது இனத்தவரைக் காப்பதற்காக அல்பேனியாவும் களத்தில் குதிப்பதற்குரிய சந்தர்ப்பங்கள் உள்ளன. மசிடோனியாவில் தளம்பல் நிலை ஏற்பட்டால்

தொடர்ச்சி 9ம் பக்கம்......

கொசோவோவில் இவ்வாறான போர் ஒன்று ஆரம்பிக்குமாயின் அயல் நாடுகளும் இதில் பங்குபற்ற நேரிடலாம் என்றும் இதனால் இது சர்வதேசப் பிரச்சனையாகப் பரிணாமம் பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன எனவும் மேற்கு நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.

# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட்

## 3



மார்ஷல் சுய்க்கோவ்

தோழர்களே, ஏதாவது நேரிட்டால், நானும் தபால்காரனும் அதோ அங்கே சிலிண்டர்கள் எரிந்து கொண்டிருக்கின்றனவே அங்கிருப்போம். அங்குதான் பட்டாலியனின் தலைமையகம் இருக்கும்....

அந்தத் தோழர்கள் தந்திரமாக நடந்து கொண்டதாக நீங்கள் கூறலாம். போர்வீரனுக்குக் கடிதம் என்பது உற்றார் உறவினரை நேரில் பாரப்பதற்குச் சமமானது. எல்லோரும் இதற்காகக் காத்திருக்கின்றனர். ஆனால், இப்படிப் பட்ட சூழ்நிலையில், மிக ஆபத்தான இடத்தில் குண்டுகளின் மீது அமர்ந்தபடி இவ்வேலையில் ஈடுபட வீரமும் சமயோசிதமும் வேண்டும்.

> **கமாண்டர்கள், அரசியல் பணியாளர்களின் சமயோசிதம், பொறுமை, உறுதி, துணிவு, மிக நெருக்கடியான நிமிடத்தில் போர்வீரர்களின் கவனம் முழுவதையும் கவரும் திறமை ஆகியவற்றுக்கான எடுத்துக்காட்டுக்களை ஏராளமாகக் கூறலாம்.**

சுருங்கக்கூறின், கம்பியூனிஸ்ட்டு சமயோசித சிந்தனையுள்ளவர்......

கமாண்டர்கள், அரசியல் பணியாளர்களின் சமயோசிதம், பொறுமை, உறுதி, துணிவு, மிக நெருக்கடியான நிமிடத்தில் போர்வீரர்களின் கவனம் முழுவதையும் கவரும் திறமை ஆகியவற்றுக்கான எடுத்துக் காட்டுக்களை ஏராளமாகக் கூறலாம். சண்டையில் கம்யூனிஸ்டுகள் காட்டிய உதாரணம் இப்படித்தான் இருந்தது.

தனிப்பட்ட உதாரணம் ..... சண்டையில் கம்யூனிஸ்டுகள் எப்படி நடந்து கொள்ளவேண்டும். என்பதைப்பற்றி எல்லாப் படைப் பிரிவுகளிலும் கட்சிக்கூட்டங்களில் விவாதிக்க வேண்டுமென படையின் அரசியற் பிரிவு கோரியது மிகவும் சரியென எனக்குத் தோன்றுகின்றது. யுத்த கவுன்சில் உறுப்பினர் கூரவும், அரசியல் பிரிவின் மேலாளர் வசீலியெவும் கையொப்பமிட்ட கடிதத்தில் அரசியல் பிரிவின் இக் கோரிக்கை அடங்கியிருந்தது. நகர வீதிகளில் நடைபெறும் சண்டைகளைப் பற்றி அதில் கூறப் பட்டிருந்தது:"ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் சுற்றியுள்ளவர்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழவேண்டும். சண்டையில் உறுதியும் துணிவும் கம்யூனிஸ்டுகளுடன் உடன் பிறந்தவைகளாக இருக்கவேண்டும். கம்யூனிஸ்டு குடும்பத்தையோ அலட்சிய மனப் பாங்கையோ வெளிப்படுத்தினால் கட்சி உறுப்புகள் அவரை கட்சிக் கட்டுப்பாட்டுக்குக் கறாராக உட் படுத்தவேண்டும், கட்சியிலிருந்து கூட அவரை விலக்கலாம்."

இக் கடிதம் கம்பனிகள், பட்டாலியன்களின் கட்சிஸ்தாபனங்களில் மட்டுமன்றி படையின் தலைமையகம் உட்பட எல்லாத் தலைமையகங்களிலும் விவாதிக்கப்பட்டது. ஒவ்வொரு தலைவனும் தான் எப்படி நடந்து கொள்கிறான் என்பதை சாதாரண கட்சி உறுப்பினர்கள் இடையறாது கண் காணித்து வருவதை உணர்ந்தான்: கட்சிக்கூட்டத்தின் முடிவுகளை நிறைவேற்றுமாறு கோர கட்சி உறுப்பினர்களுக்கு உருமையுண்டு. ஆம், இது தான் எங்களின் கட்சியுடைய விதிமுறை – கூட்டத்தின் முடிவுகளுக்கு எல்லோரும் கட்டுப்பட்டாக வேண்டும், உள் கட்சிக் கட்டுப்பாட்டை யார் மீறினாலும், அவர் எப் பதவியில் இருந்தாலும் அதற்கு அவர் ஒரே மாதிரியாக கறாராக பதில் சொல்லியாக வேண்டும். படையின் கமாண்டர் என்ற முறையில் நான் கம்யூனிஸ்டுகளின் இந்தக் கோரிக்கையை வரவேற்றேன்.

எனவேதான் நகரத்தின் மையத்தில் தெருக்களில் சண்டைகள் துவங்கிய மிகக் கடுமையான நாட்களில், படையின் யுத்த கவுன்சிலால் சோர்வு மனநிலை பரவாமல் விரைவாகவும் உடனடியாகவும் தடுக்க முடிந்தது. நகரத்தைப் பாதுகாப்பது விவேகமாக இருக்குமா என்று சந்தேகப் பட்டவர்கள் தான் இம் மன நிலையைப் பரப்பமுயன்றனர். கட்சி ஸ்தாபனங்களை ஆதாரமாகக் கொண்டு யுத்த கவுன்சில் கோழைகள், பீதியைக் கிளப்பியவர்கள் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டது. போர்க்களத்திலிருந்து ஓடிய கோழையை – அவன் சாதாரண போர்வீரனாக அல்லது கமாண்டராக, யாராக இருந்தாலும் சரி – கண்டிக்காத ஒரு போர்வீரன் கூட 62வது படையில்



இருக்கவில்லை. தன் முதுகின் பின்னால் ஒளிந்து கொள்ள விரும்பியவர்களை அல்லது தம் கோளைத் தனத்தால் மற்றவர்களுக்கு துரோகம் இளைத் தவர்களை எந்த ஒரு உண்மையான போர் வீரனாலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நகரத்தைப் பாதுகாத்து நின்றவர்களில் பெரும்பான்மையினரின் உணர்வில் இப்படிப்பட்ட உணரிய நோக்கங்கள் தான் மிகுந்திருந்தன. எனவே மிகக் கடினமான நிலையிலும் எதிரி ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் விஞ்சி நின்றபோதிலும் ஓரிடத்தில் கூட பெருமளவு பீதி நிலவவில்லை. இதற்கான பெருமை 62வது படையின் கட்சி ஸ்தாபனங் களைத்தான் சேரும்.

இடையறாமல் இரவும் பகலும், பல வாரங்களும் மாதங்களும் வெடிச்சத்தம் தொடர்ந்து கேட்ட தெருச் சண்டைகளில், கட்சியின் முக்கிய முடிவுகளையும் படைத்தலைமையின் உத்தரவுகளையும் விளக்குவதற்காக பரவலான பொதுக் கூட்டங்களை நடத்த அரசியல் பணியாளர்களால் முடியவில்லை. இதற்கான வாய்ப்பே இருக்கவில்லை. பல நேரங்களில் பிரசாரகர் நிலவறையிலோ, மாடிப்படியின் அறையிலோ நின்ற படி கடமையை சுரக்கமாக விளக்கினார். அடிக்கடி நேரடியாக சண்டையிலேயே நடை முறையில் எப்படியாக ஆயுதத்தை கையாள வேண்டும், கமாண்டரின் உத்தரவை எப்படி நிறை வேற்றவேண்டுமென தானே செய்து காட்டினார். நீண்ட சொற் பொழிவுகளை விட இப்படி செயல் முறையில் காட்டியது வீரர்கள் மனதில் நன்கு படிந்தது. என்று தான் கூறவேண்டும். எனவே, தெருச்சண்டைகளின் செயல் முறை தந்திரத்தை பரிபூரணமாக அறிந்திருக்கும் கடமையும், ஆயுதங் களை, முதலில் தானியங்கித் துப்பாக்கிகளையும் எறி குண்டுகளையும் எப்படிப் பயன் படுத்துவதென தெரிந்திருக்கும் கடமையும் 62வது படையின் அரசியல் பணியாளர்கள் முன் நின்றன. பெரும்பாலானோர் இவற்றை நன்கு நிறைவேற்றினர்.

தெருச் சண்டையின் சிறப்பு அம்சங்களைப் புரிந்து கொண்டபின், அரசியல் பணியாளர்கள் தம் பணியை கம்பெனிக்கு, பிளாட்டுனுக்கு, தாக்குதல் குழுவிற்கு மாற்றினார்கள் என்பதில்தான் 62வது படையின் கட்சி ஸ்தாபனங்களின் சேவை அடங்கியிருந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. தனிப்பட்ட கலந்துரையாடல் தான் அரசியல் பிரசாரகர்கள், கட்சி செயலாளர்கள், கம்சமோல் செயலாளர்கள், அரசியல் பிரிவுப் போதகர்கள் போன்றவர்கள் தம் பணியில் பின்பற்றிய முக்கிய வடிவமாக இருந்தது. தன்னந்தனியாக எதிரியின் பின்னணியில் அகப்பட நேரிட்டாலும் கூட, ஒவ்வொரு போர்வீரனும் எதிரியுடன் கடைசி வாய்புள்ளவரை போரிடவேண்டும், போரிட அவனால் முடியும் என்ற உணர்வை அப்படித்தான் ஒவ்வொரு போர்வீரனுக்கும் ஊட்டமுடியும். படைத் தலமை அளித்த நம்பிக்கையை, சுயமாக இயங்கும் உரிமையை அவன் விவேகமாக பயன் படுத்த வேண்டும். மொத்தமாக றெஜிமெண்டு, டிவிஸன், படையின் முன் வைக்கப்பட்டுள்ள கடமையை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். நம்பிக்கையால் மட்டுமே போர்வீரர்களின் ஆக்கபூர்வமான போர்க்கள நடவடிக்கையை உயர்த்த முடியும். அது பொறுமையான சிக்கலான பொறுப்பான பணியாக இருந்தது. ஆனால் இது அற்புதமான பலனைத் தந்தது. கட்சி ஸ்தாபனங்களின் இப்படிப்பட்ட நடவடிக்கைகளின் பயனாய் நகரப் பாதுகாவலர் ஒவ்வொருவரும் எதிரியின் பாதையில் மீற முடியாத தடையாக விளங்கினார் என்று எவ்வித மிகைப்படுத்தலுமின்றிக் கூறலாம்.

போர்க்கள உத்தரவுகளின் நிறை வேற்றத்திற்காக கட்சி ஸ்தாபனங்கள் உடனுக்குடனும் செயல்முனைப்போடும் செயல்பட்டன. அரசியல் பிரிவின் பல பணியாளர்கள், போர்க்கள உத்தரவைப் பெற்றதும், மிகச் சிக்கலான, கடினமான இடங்களுக்குச் சென்றது எனக்கு நினைவில் உள்ளது. அவர்கள் திட்டவட்டமான நோக்கங்களோடு முன் சென்றனர். உத்தரவு ஒவ்வொரு போர்வீரனையும் எட்டுமாறு செய்ய வேண்டியிருந்தது. எந்த ஒரு சூழ்நிலையிலும் போர்க்கள கடமையை நிறைவேற்றுவதற்காக கட்சி, கம்சமோல் ஸ்தாபனங்களை அணி திரட்ட வேண்டியிருந்தது. இச்சூழ்நிலைகளோ சிக்கலானவையாக, ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரி யானவையாக இருந்தன. அந்தந்த நிலவரத்திற்கேற்ப அரசியல் பணியாளர்கள் செயல்பட்டது மிகவும் பலனளித்தது. அவர்கள் உரிய தருணத்தை எதிர்பார்த்துக் காத்திராமல் உடனடியாக தாக்குதல் குழுக்களுக்கு, இயந்திர பீரங்கி வீரர்கள், பொறியியல் பிரிவு வீரர்கள் ஆகியோரிடம் – அவர்கள் எங்கிருந்தாலும் – சென்றனர். போர் வீரர்கள் மத்தியில் நடத்தும் அரசியல் விளக்க, பிரச்சாரப் பணியில் எவ்வித இடைவெளியும் இருக்கக் கூடாதென அரசியல் பிரிவினரிடம் கூறப்பட்டிருந்தது.

**தொடரும்.....**




## கைகொடுப்போம் கையுள்ளே......

அண்ணன் எடுத்த வீரவேள்வியில்
அந்நியன் சிரமறுத்துப் போட்டு
எம்மை-எம்மானத்தை-மண்ணை-மொழியை
எம்மினத்தைக் காத்து இன்னல் நீக்கிட
ஏற்றத் தாழ்வும் எமது பெண்ணடிமையும்
ஏற்காதன வெல்லாம் எரித்து பொசுக்கிட
அண்ணன் கரத்துள் இணைந்து கைகொடுத்து
மண்ணின் மீட்பில் மகிழ்வோம் உயிர்தர.

– அகிலா, யேர்மனி.

## சாகாத சுதந்திர தேவியரே

போர் செய்யும் பகைமைக்கு
நேராக நெஞ்சுயர்த்தும்
பேரார்வப் பெண்புலிகள்
வீராவேசமது விடுதலைக்கு
சீரான விழுதாகும்
சோராமல் சென்று
வேரோடு வென்றுவரும்
சாகாத சுதந்திர தேவியரே!

–அவுசூர்யா இளையவன், யேர்மனி.

## அன்றும் இன்றும்

குனிந்த் தலை – தரை நோக்கும் கண்கள்–
நால்வகைக் குணமும் முகத்தில் காட்டி
நடைதனில் மெலிந்துவலம் வரும் பெண்ணாய்
அன்று
நிமிர்ந்த தலை–நேர்நோக்கும் பார்வை–
குணங்களோ அகத்தில் குறிக்கோளோ முகத்தில்
ஆயுதமேந்தி அணிவகுத்து
ஆயத்த நிலையில் இன்று.

– அமலா ஜெயந்தன்.



## புரட்சிப் பெண்

புதுமையே வா புரட்சி படைத்திடுவோம்
வேங்கையே வா பெண்ணினம் நிமிரட்டும்
ஏற்றிய துப்பாக்கி வேட்டுக்கள் கொட்டட்டும்
எதிரியின் மார்பினை துளைக்கட்டும்
இலக்கிய நோக்குனர் இன்றுன்
புது அத்தியாயம் எழுதட்டும்
நாளை நல்சமுதாயம் பிறக்கும்!

–கணேசமூர்த்தி சுரேந்திரன், யேர்மனி.

## சுதந்திரப் பயிற்சியில் சுழலும் மங்கை!

மலர்மாலை சூடவேண்டும் மங்கையிவள்
விடந்தன்னை மாலையாகக் கொள்வதென்ன?
பலர்வாழ்த்த இல்லறம் துவக்கிடாமல்
மரணத்தை எதிர்நோக்கி நிற்பதென்ன?
களமேறிச் சரித்திரத் தடம்புரட்டிச்
சத்தியம் நிலைநாட்ட வந்துநின்றாள்
பழமையில் துமின்றிடும் மனிதனே வா!
சுதந்திரம் அடைதலே கடமை என்றாள்!

– எழிலன், யேர்மனி.

## கழுத்தினில் நஞ்சினை சுமந்திடு தோழி

சத்திய வேள்வியில் செத்தவர் மீதிலோர்ஆணை–தமிழ்
சந்ததி வாழ்ந்திட நடத்திடுதானை
வித்துக்குள் பூட்டிவைத்தாலும் வெளியே வந்து
முளைத்திடுவோம் என்று முழங்கு–தமிழன்
சொத்துக்கும் உயிருக்கும் பங்கம் விளைப்போர்க்கு
வெடிகுண்டாக விளங்கு
வீட்டுக்குள் விளக்கேற்றும் குலமாதரே –இந்த
நாட்டிற்கு விளக்கேற்றிடவா நஞ்சினைச் சுமந்து.

– கவி, லண்டன்.

## தன்மானம் காப்பாய்

கற்றதன் பயனால்
பதக்கமணியுமுன் கழுத்தில்
வேங்கையின் சொத்தான
குப்பியணிவித்தாள் சோதரி
தன் மானங்காத்து
மண்மானங்காத்து
வென்றுவா தமிழிச்சி
தமிழீழத் தங்கச்சி

–வீ. நடா, யேர்மனி.

## காலத்தின் தேவை

நஞ்சுமாலை சூடும் நம் தங்காய்
பெறற்கரிய பேறு பெற்றாய் எம் மகளே
உன் உயர் நோக்கில் உறுதியைக் கண்டோம்
நாமும் உன்னுடன் களம் நோக்கி நடப்போம்
துணிவுடன் துப்பாக்கி துள்ளி விளையாடும்
சிதறடிப்போம் சிங்கள வெறியரை
உடைத்தெறிவோம் அன்னையின் விலங்கை
வெற்றிக் களிப்பில் ஈழம் மலருமே.

– யோகா வாசகர், அவுஸ்திரேலியா.

## போய்வா தமிழ்க்கண்ணே

போய்வா ஈழத்தமிழ் கண்ணே
நாளை நானோ நீயோ இல்லாமல் போகலாம்
நம் தேசத்தின் இருண்ட நாட்களின்
பௌர்ணமிக்காய்
நீ நேசித்த விடியலுக்காய்
நம் தேசம் இறுமாந்துபோகும்
நம் காலடிச் சுவட்டின் அடித் தொடர்கள்
விடியல் வரை தொடரும்

– சண்முகராசா சண்முகேஸ்வரி, பரிஸ்.

## சென்று வா மகளே!

புன்கையுடன் முழுநிலவில் மகிழ்ந்து
பூத்துக் குலுங்கிய உன் குடும்பம்
சின்னாபின்னமாகி சீரழிந்து நிற்கிறதே
மீண்டும் எம் முற்றத்து மண்ணில்
மல்லிகை முல்லை நறுமணத்துடன்
முழுநிலவில் ஆடி மகிழ்ந்திட
அடக்கியாளும் சிங்கள அரசை
சிந்திக்க வைப்போம்–சென்றுவா மகளே!

–ஆன் மதுரநாயகம், பிரான்ஸ்.

## தலைவன் காலத்து மறக்குலமே

அன்னைமண்ணை அடிமைகொள்ள வந்தபகை விரட்ட அடுக்களைவிலங் குடைத்து களம்வந்த சிறுத்தைகளே தமிழீழநிலவே என்றெல்லாம் அன்பால் கட்டியபோதிலும் தாயகம்காத்திட சினம்கொண்டு அணிபினில்வந்த புயல்களே தலைவன் காலத்தில் பெண்ணுக்கும் மண்ணுக்கும் விடுதலை பெற்றிடலாமென எழுந்த மறக்குலமே சரித்திரம்படைத்திட எரிமலையாய் வெடிக்கவும் துணிந்தீரே!

– செ. ஈழமணி, பிரான்ஸ்.

## எழும் சூரியன்

மரணத்தில் வாழ்வு கண்டு
தமிழன் விடிவுகாண புறப்பட்டீர்கள்
பெண்கள் மென்மையென்று
யாரோ கூறினாரே!
புயலென நீங்கள் புறப்பட்டீர்கள்
பொருது களம் நோக்கி
அண்ணன் வழியில் நீவீர் செல்லுதல்கண்டு
ஈழத்தில் புதிய சூரியன் எழுகின்றான்.

– இ. வைத்திலிங்கம், சுவிற்சலாந்து.

## வாசகர் கடிதம்

ஆசிரியர் அவர்கட்கு,
களத்தில்

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,
கனடாவிலுள்ள எங்கள் நண்பர்களிடமிருந்து வரும் 'களத்தில்' பத்திரிகையைப் படிக்கும் அரிய சந்தர்ப்பம் சிலவேளை எங்களுக்கும் கிடைக்கிறது.

இந்த நாட்டினருக்கும், இந்த நாட்டில் வாழும் வெளிநாட்டினருக்கும் இயக்கத்தின் கொள்கைகள் நடவடிக்கைகளை நன்றாக விளக்கும் கட்டுரைகள் துண்டுப்பிரசுரங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் மூலம் அறியச் செய்யலாம். முடியுமாயின் அத்தகைய படைப்புக்கள் பலவற்றை அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.
'களத்தில்' வளர்ச்சிக்கு எனது நல்லாசிகள்.

இப்படிக்கு,
சி. தம்பிராசா.
தபாற்பெட்டி இல. 21368, கம்பாலா, உகண்டா
2-4-98.

## பாயும் புலியென உணர்த்துவாய்

நஞ்சு மாலை கழுத்தில் சூடும் நவயுகப் பெண்ணே
பிஞ்சு வயசில் போர்க்களம் போகும் புரட்சிப் புயலே
கெஞ்சிக் கேட்டுப் பெறுவதல்ல சுதந்திரம்
வஞ்சகம் புரியும் சிங்கள அரசை
செங்களமாடி வென்று நீ வருகையில்
பஞ்சணை மெத்தை பாவையல்ல நாம்,
பாயும் புலியென பாருக்கு உணர்த்துவாய்.

–செ. தமிழினியன், யேர்மனி.

## புதுப்பாதை அமைத்துவிட்டீர் எமக்காக

உலகவரை படத்தில் உதயமாகும் எம்சுழம்
உண்மைக்கு புடமிட்ட சரித்திரங்கள்
நூறாண்டு பலமீண்ட ஆண்மைகண்ட ஆதிக்கம்
நூலதுவின் மெல்லிழையில் ஊஞ்சலாட வைத்தவரே
போர்மேகம் கலைத்திடவே புயலாகப் புறப்பட்டீர்
போகமதைத் தாகமதாய் தலைக் கொண்ட மனிதஇனம்
பூவையரே உம்செயலைப் பொன்னெனவே போற்றிடுவார்
புறப்பட்டீர் புதுப்பாதை அமைத்துவிட்டீர் எமக்காக.

– இர. நடா., யேர்மனி.

## ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி!

# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

சித்திரை மலர்ந்தது. தமிழருக்கு புத்தாண்டு பிறந்தது. வெகுதானிய ஆண்டில் வெற்றித் திருமகளுக்கு நல்வரவு கூறி செந்தமிழர் புதிய ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றனர். இந்நேரம்-

பொங்கும் தமிழர் வீரம் வென்று, தங்கும் துன்பம் தகர்த்தெறிந்து, எங்கள் தேசம் அமைதி காண, தேசத் தலைவன் பிரபாகரனுடன் சேர்ந்தே நாமும் உழைப்போம் என்று புலம்பெயர் தமிழர் நாமும் மனதில் உறுதி கொண்டு, புத்தாண்டில் புதுத் தெம்புடன் நுழைவோம்.

அமைதி என்பது அடுத்தவன் தருவது அல்ல. உழைப்பால் பெறுவது. தமிழீழ விடுதலைப் புலிகள் - எங்கள் அமைதிக்காய், எங்கள் குழந்தைகளின் அமைதிக்காய், தம் இன்னுயிர்களைக் கூட ஆயுதமாக்கி - அர்ப்பணமாக்கி - அகிலமே காணாத தியாகக் கூட்டமாய், உறுதியின் உறைவிடமாய் உழைக்கின்றனர். இந்தத் தியாகிகள் கூட்டத்தின் தாயாய் தந்தையாய் உற்றாராய் உறவினராய் நண்பராய் தேச உடன் குடிகளாய் நாமும் வாழ்ந்திடப் பேறு பெற்றோம் என்ற பெருமிதத்தில் எங்கள் உள்ளங்கள் இறும்பூதெய்துகின்றன.

இந்த, எங்கள் உள்ள உணர்வை உள்ளத்தில் மட்டும் கொண்டிருந்தால் போதாது. அதனை எமது சொல்லால் செயலால் வாழ்வால் வையகத்தினருக்கு எடுத்து விளக்க வேண்டும். உன்னதங்களின் சொந்தக்காரர்கள் நாங்கள். உயர்வான தமிழீழத் தேசத்தின் உரிமையாளர்கள் நாங்கள். உரிமை என்றாலே அங்கு கடமையும் வந்துவிடும். உரிமையும் கடமையும் பிரிக்க முடியாதவை. எனவே, எமது கடமை என்னவென்ற கேள்வி எழுகிறது.

உள்ளதைக் கூறுவது முதற் கடமை. அல்லவை நீக்க அனைவரையும் அழைப்பது அடுத்த கடமை. தொல்லைகள் எல்லைகளுக்கிடை உடல் தந்த மண்ணுக்காய் உறவு தந்து சிந்தனை - பேச்சு - வாழ்வு தந்த மொழிக்காய், எம் தாயக உடன்பிறப்புக்களுக்காய் காலத்தை உழைப்பை பகிர்ந்து கொள்ளுதல் பெருங் கடமை.

உள்ளதைக் கூறுதல் என்பது முன்னர் நாடு திகழ்ந்த பெருமையையும் மூண்டிருக்கும் இந்நாள் நிகழ்ச்சியையும், நாளை நாடு உறு சிறப்பையும் எடுத்து விளக்கும் பெரும் பணி. தனியரசு தமிழரசு கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழீழ மக்களாகிய நாம். காலனித்துவ கால் வைப்பு தேச விடுதலைக்கான பெரும் பயணத்தை ஆரம்பமாக்கியது. 1621 இல் ஆரம்பமான விடுதலைப் பயணம்

பிரித்தானியரின் தவறான முடிவுகளால் சிங்கள நவகாலனித்துவ அடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டமாக 1972 முதல் தொடர்கிறது. தமிழீழ மக்கள் எதையுமே பிரிக்க நினைக்கவில்லை. எதையுமே புதிதாக கேட்கவுமில்லை. யாரையுமே அடக்க நினைக்கவும் இல்லை. தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் அமைதியாக - பாதுகாப்பாக வாழ விரும்புகின்றனர். ஒரு இன மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தை தாமே நிர்ணயிக்க விரும்புவதை சுய நிர்ணய உரிமை என அரசியல் மொழியில் கூறுவர். இது மனிதருடைய பிரிக்கப்பட முடியாத உரிமை என்கிறது ஐக்கிய நாடுகள் சாசனங்கள்.

இந்த உரிமை கொண்டு தமிழீழ மக்கள் தம் தாயகத்தில் தாம் நிம்மதியாகப் படுத்து தூங்க, தொழில் செய்து வளம் காண, மனிதராய் பாதுகாப்புடன் வாழ முற்படுவதில் என்ன தவறு? எதற்காக இவைகளை எல்லாம் கொடுக்க மறுத்த சிங்களப் பெரும்பான்மை அரசு தமிழ் மக்கள் அதைத் தாங்களே உருவாக்க முயற்சிக்கும் பொழுது அதனை அனுமதியாது இனக்கொலைகளையும் இனவதைகளையும் அப்பட்டமான ஆக்கிரமிப்புக்களையும் நடாத்துகிறது? இதனை தட்டிக் கேட்க கடப்பாடு உடைய ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச நிறுவனங்களும் ஏன் வாய் மூடி மௌனமாக இருக்கின்றன? காரணங்கள் பலவுண்டு. அவற்றுள் ஒன்று, நாம்.

நாம், நம்மை தமிழீழ மக்களாக வெளிப்படுத்துவதில் காட்டும் அலட்சியம் தான் சர்வதேச சமூகம் மௌனமாக இருப்பதற்கு முக்கிய காரணம். நாம் இன்றும் எம்மை சிறுபான்மையினர் எனவும் சிங்களவர்களைப் பெரும்பான்மையினர் எனவும் காலனித்துவம் சொல்லித் தந்த பாடத்தை ஒப்புவித்துக் கொண்டு வாழ்கின்றோம். சிங்களப் பெரும்பான்மை அரசின் குடிகளென்று கூறும் - எண்ணும் - பைத்தியகாரத்தனத்தில் உழல்கின்றோம். எம் சந்ததியையே வேரோடு அழிக்க செயற்திட்டங்களை வகுத்துச் செயற்படும் சிறீலங்கா அரசு எமது அந்நிய அரசு எனத் தோலுரித்துக் காட்டுவதற்கு ஏனோ தயங்குகின்றோம். சுயநலங்கள் காரணமாக இருக்கலாம். ஆனால், எம் நலத்திற்காக எம் சந்ததியின் நல்வாழ்வுக்காக செத்து மடிந்து தேகம் சிதைத்து பாசங்கள் பந்தங்களைக் கூட மறந்து உயர்படிப்புக்களையும் வாழ்க்கை உயர்ச்சிகளையும் அழிந்து ஒரு தேசமே போராட்டக் கோலம் கொண்டு விடுதலை வேள்வி நடாத்துகின்றதே! அதை எடுத்துச் சொல்ல நாம் மறந்தால் நாம் மனிதர்களே அல்ல.

தத்துவங்கள் பேச இது நேரமல்ல. சரித்திரங்கள் கதைத்து விதண்டா வாதம் செய்ய இது காலமுமல்ல. ஒரு தேசம் விடுதலைக்கான மிக உயர்ந்த தியாகங்களுடன் எரிமலையாய் குமுறுகின்றது. அதனை ஆயுதபடைபலம் கொண்டு அழித்திடலாம் என்ற பகற்கனவு காட்டி பதவிக்கட்டிலை கட்டிப்பிடிக்கும் பகீரதப்பிரயத்தனத்தில் சந்திரிகா அரசு தள்ளாடிக் கொண்டு நிற்கிறது. அந்த அரசாங்கத்தின் ஈவு இரக்கமற்ற இராணுவ வெறியாட்டத்திற்கு சாதாரண தமிழ்மக்களும் தமிழர் தேசமும் அனுதினமும் இலக்காக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது.

சாவா? அல்லது விடுதலை வாழ்வா? இது தான் தமிழ் மக்கள் முன்புள்ள ஒரே கேள்வி. சாவையும் சுமந்து விடுதலை வாழ்வு பெறுவோம் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக நிற்பதை விடுதலைப் புலிகளின் யாராலுமே தடுக்க முடியாத இராணுவ வெற்றிகள் உலகுக்கு உணர்த்தி நிற்கின்றன. அதனைப் பயங்கரவாதம் எனப் பட்டப் பெயர் சூட்டியாவது மறைத்து விட முனைந்து நிற்கிறது சந்திரிகா அரசாங்கம்.

இந்த யதார்த்த சூழ்நிலையில் வெகுதானிய வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் நாம் இரண்டு வழிகளில் எம் கடமை செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். ஒன்று - எங்கள் தேசத்தின் விடுதலைத் தலைமைக்கு மதியும் நிதியும் அளித்து ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பது.

அடுத்தது, சிங்கள அந்நிய அரசின் உண்மைக்கு மாறான பிரச்சாரங்களை அம்பலப்படுத்தி உண்மையை உலகுக்கு விளங்கப்படுத்தி துன்புறும் எம்மக்கள் குரலாக ஒலிப்பது.

இவை இரண்டுமே கூட்டு மனித முயற்சிகள் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள். ஆகவே, நாமும் எங்கள் எங்கள் பகுதிகளிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பணிமனைகளுடன் இணைந்து இப்பாரிய பணியை எம் வாழ்வின் நாளாந்தக் கடமைகளில் ஒன்றாக இப் புத்தாண்டில் முன்னெடுப்போமாக.

- அன்பின் ஆசிரியர்.

## அரியாங்குப்பத்தில் இருந்து நெஞ்சைத் தொடும் கடிதம்

*தமிழ்நாடு புதுச்சேரியிலுள்ள அரியாங்குப்பம் கிராமத்தில் இயங்கி வரும் இராவணன் பகுத்தறிவு இலவச நூலகத்தின் சார்பில் கடந்த ஆண்டு தமிழர் எழுச்சி விழா 26.11.1997ல் பெருவிழாவாக கொண்டாடப்பட்டுள்ளது. இதனை இவ்வூர் தமிழ் உடன்பிறப்புக்கள் தாம் எவ்வாறு கொண்டாடினர் என 'களத்திலுக்கு' மடல் எழுதியனுப்பியுள்ளனர். அஞ்சல் கோளாறுகளினால் தற்பொழுது தான் அதனை பிரசுரிக்கும் வாய்ப்புக்கிட்டியது. அம்மடலை வாசகர் படித்து அவர்கள் தமிழீழ மக்கள் மேல் கொண்ட பாசத்தைச் சுவைக்க – இதோ அம்மடல்!*

### தமிழர் எழுச்சி நாள் 97

கடந்த 26.11.97 அன்று புதுச்சேரி அரியாங்குப்பத்தில் உள்ள இராவணன் இலவச பகுத்தறிவு நூலகத்தின் சார்பில் தமிழர் எழுச்சி நாள், விழாவாக கொண்டாடப்பட்டது.

காலை பத்து மணி அளவில், நூலகத்தின் முன்னே சுமார் 300 பேர் திரண்டனர். நூலகத்தில் இருந்து காலை 10.30 மணிக்கு பேரணி துவங்கிய பொழுது, கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை சுமார் 600 ஆக உயர்ந்தது. வீராம் பட்டினம் சாலையின் ஊடாக பேரணி சென்ற பொழுது மக்கள் சாலையின் இருமருங்கிலும் நின்றபடி ஆதரவுக் குரல்களை ஆரவாரமாக எழுப்பினர். இவ்வேளையில் 1கி.மீ. நீளத்திற்கு வெடிகள் வெடிக்கப்பட்டன. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான முழக்கங்களுடன் வந்த பேரணி கடலூர்ச்சாலையினை வந்தடைந்து முடிந்தது. விழாவின் நோக்கத்தை மக்களுக்கு எடுத்துரைத்து மகிழ்ச்சியை பகிர்ந்தளிக்கும் முகமாக இனிப்புக்களும் வழங்கப்பட்டது.

பின்னர், பிற்பகலில் புதுச்சேரி அருகே முதலியார் சாவடியில் அமைந்திருக்கும் ஈழத்தமிழர் ஏதிலியர் முகாமிற்குச் சென்ற நூலகத்தினர், 250 தமிழீழ மக்களுக்கு நூலகத்தின் சார்பில் உணவுப் பொட்டலங்களையும், உடைகளையும் வழங்கினர். ✳

## சிறிலங்கா அரசின் கலைந்த.....

முடித்துவிட முடியாதென்பதையும் மறுபுறம் ஜெயசிக்குறு முடிவு ற்றாலும்கூட போர் முடிவடையப் போவதில்லை என்பதையும் புலிகள் உணர்த்தியுள்ளனர்.

இதேசமயம், தமிழ் மக்களோ சிறீலங்கா அரசு எதிர்பார்த்த மாதிரி ஆதரவளிக்கத் தயாராக இல்லை என்பதை மட்டுமல்ல, விடுதலைப் புலிகளுக்கு மாற்றானதொரு தலை மையை தற்பொழுது 'ஏற்பதற்கில்லை என்பதையும் சந்திரிகா அரசிற்கு புரிய வைத்துள்ளனர் எனலாம். இந்த வகையில் தமிழ் மக்களை வென்றெடுப்பதோ அன்றி விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரித்து விடுவது என்பதோ சிறீலங்கா அரசிற்கு சாத்தியமானதாக இருக்க வில்லை. இந்த நிலையில் ஹரி குணதிலக குறிப்பிட்டது போன்று, சந்திரிகா அரசின் கனவுகள் பகற்கனவாய் போய்விட்டன என்பது சரியானதே. ஆனால் சந்திரிகா அரசு தனது கனவுகள் கலைந்து போனதைப் பற்றி ஒப்புக் கொள்வதற்கு தயாராக இல்லை. கண்களை இறுக மூடிக்கொண்டு மீண்டும் கனவு வரும். எனக் காத்துக் கொண்டிருக்கின்றது. ✳

## கடல் மடியில் கலந்த.....

கேட்டுப் பார்த்தாள். யாருமே தம்மிடம் உள்ள தலைவரின் படங்களைக் கொடுக்கத் தயாரில்லை. அந்த நேரம் தான் யாழ்ப் பாணத்திலிருந்த விடுதலைப் புலிகளின் தளங்கள், வன்னிப் பகுதிக்கு இடம்மாறிக் கொண்டிருந்தன. யாழில் இருந்த கடற் புலிகளின் பொருட்கள் பயணித்த ஒரு படகில் வினோதாவும் இருந்தாள். திட்டம் தயாரானது. கடற்கரும்புலி கப்டன் தணிகை, கடற் கரும்புலி மேஜர் சுடரொளி, கடற்புலி கப்டன் செங்கொடி, கடற்கரும்புலி கப்டன் கனகா, இவர்களுடன் வினோதாவும் சேர்ந்து பாட்டுப் பாடத் தொடங்கினர். பொருட்களுக்குரிய தளத்தைச் சேர்ந்த போராளி, அலையின் தாளத்திலும் இவர்களின் கானத்திலும் உறங்கத் தொடங்கியதும் படகில் இருந்த தலைவரின் படம் வினோதாவின் கைக்கு வந்தது. வினோதா என்றால் இப்படித்தான் என்று எல்லோருக்குமே தெரியும். மண்டைதீவு தரையிறங்குகலம், ஓயாத அலைகள் என பல கடற்சண்டைகளுக்கும் போன வினோதாவுக்கு ஓயாத அலைகள் நடவடிக்கையில் காலில் பெரிய காயம். ஆனால் அவள் படகை விட்டு இறங்கவில்லை. ஒருநாள் முழுவதும் படகுடன் கடலில் நின்ற அவளைச் சக போராளிகள் கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தனர். திரும்பி வரும் வழியில் படகு கவிழ்ந்துவிட்டது. அதில் வினோதாவுடன் காயப்பட்ட வேறு பல போராளிகளும் இருந்தனர். வினோதா தன் காயத்தையும் பொருட்படுத்தாது, ஒவ்வொருவராகப் பிடித்து இழுத்து நீந்திக் கரை சேர்த்தாள். கடைசியாக அவளுக்குரிய தாக்குதல் படகும் இலக்கும் கொடுக்கப்பட்டது. புறப்படும் போது தன் சிறிய தந்தையைச் சந்தித்தாள்.

"சித்தப்பா, நான் கரும்புலியாப் போறன். அப்பா, அம்மாட்டச் சொல்லுங்கோ, கவலைப்பட வேண்டாமென்று" எனக் கூறிவிட்டுச் சென்ற வினோதா, 1997.05.27 அன்று முல்லைக் கடற்பரப்பில் தன்னுடன் கூடவே வந்த கடற்கரும்புலி மேஜர் அன்புவுடன் அலைகளில் கலந்து போனாள்.

"மாவீரரே கடல் வேங்கைகளே......" என்று மாவீரர்களுக்காக அவள் பாடும் பாடலை இப்போது அவளுக்கும் சேர்த்து நாம் பாடிக் கொண்டிருக்கின்றோம்.

# பிரிவால் பிரிந்த தாய்மையே...!

அம்மா..... என் தாயே.....!
கருவில் ஏற்று கன்னிமை தியாகம் செய்து
பத்து மாதங்கள் சுமந்துதிரிந்து,
பூமிப்பந்தில் கால் பதித்த பின்பும்
நான் பெண்ணென்று – மேலும் மேலும்
பல் பொறுப்புக்கள் நீ ஏற்று, எனக்காக
துன்பங்களையும் இன்பமாய் அனுபவித்து....
நேற்று,
நானும் உன்போல் கன்னியாகி
பூவும் பிஞ்சும் என என்பின்னே
நீண்டதொரு தலைமுறையை தருவதற்கு
காத்திருந்த நேரத்தில்......

பேரன்–பேத்தி என்ற பந்தங்கள்
உருவாக்கி, கொஞ்சி, குலாவி
கோயில்–திருத்தலங்கள் என்றெல்லாம்
ஏறி இறங்கி, பஜனை, வழிபாடு,
பச்சைக் கூண்டோடு கைலாயம்,
முத்திதனை ஏற்று பிறவா வரம்.....
எத்தனையோ உனக்குள்
எதிர்பார்த்த நேரத்தில்......

ஆடை கழைந்தொருகை
மாற்றுங் கணங்களிலே
ஈயென்ன எறும்பென்ன
எங்கெங்கோ எல்லாம் செல்வதனால்
தென்றலேனும் தளுவுதல்
கன்னிப் பெண்மைக்கு
களங்கமென உபதேசம் செய்து
மலரின் இதழ்போலே காத்தவளே
என் அம்மா...... தாயே......!

ஆண்டவன் முன்னேதான்
கற்பூரம் அவிதல் மோட்சம் என்று
பெண்மையின் புனிதத்தை
ஒப்புவமை செய்தவளே......!
உன் இருவிழிகள் பார்த்திருக்க
உன் அனுமதியை கேட்காமல்–
உன் ஆட்சேபனைக் குரலை
காதில் போட்டுக்கொள்ளாமல்–
கத்திக் குழறி புழுதியிலே புரண்டெழுந்து
மண்வாரி தலைமேலே
கொட்டி, விசரியாய் ஆகிப் புலம்பும்
உன் அவலத்தை மதிக்காமல்–
அன்று, எங்கள் முற்றத்தில் வந்த
இரும்புத் தகடு பதித்த
கருங்கற் பாதங்கள்
வளைக் கையின் எலும்பு உடைய
வெறித்தனத்தின் வேட்கையிலே
விழிகளில் நெருப்பெரிய
உன் மலரை– கற்பூரத்தை–
உன் புனிதத்தை......

எப்படி நீ பொறுப்பாய்–இதை
எப்படி நீ சகிப்பாய்–அந்தக்
காட்சியின் கொடூரத்தை
எப்படி நீ மறப்பாய்?
உன் இறப்பு வரை அந்த வெறியர் செய்த
அரக்கத்தனங்கள் உன்னைக் கொன்றனவே!
'கொறகொற'வென இழுத்துச்செல்கையில்
உடலிருந்து பாய்ந்த குருதிவெள்ளம்
புழுதிகலந்து திரண்டிருந்து–
நான் போன சுவடு சொல்லி–
உன் உயிர்க்கொடி அறுத்தாயே......!

அம்மா.....என் தாயே.....!
என் சேதி அறிவதற்கு
இரவு பகல் தெரியாது–
விழித்திருந்து களைத்தாயோ?
வயிற்றின் பசியும் அறியாமல்
உடல் வருத்தியிருந்தாயோ?
கண்களில் நீர்வற்றி
குருதிதான் பாய்ந்ததுவோ?
எத்தனை நாள் பிணமாக
வாழ்ந்திருப்பாய்?
இன்று எனக்காக நீ
பிணமாகிப் போனாயே!

பொன்னும் பொருளும் வயல்புலமும்
பண்ணையும் பெருக்கி
எத்தனையோ தலைமுறைக்கு
சொத்துக்கள் சேர்த்துவைத்து–
ஆசாரம் அனுட்டானம்
சாதி சமயக் கூர்மையுடன்
பேசித் திருமணங்கள் செய்து,
வீண் பெருமைகொண்டு வாழ்ந்தீரே
தாயின் மொழியதையும்
தங்கும் எம் நிலத்தினையும்
பெருமைப்படுத்தி ஒரு
பெயர் சூட்டிப்பார்த்தீரோ?
நானும் நீயும் நாலு குளி நிலம்
இல்லாதார் தானும்
கானகம் உறைந்தும் – கப்பல் படகென்று
ஏறி இறங்கி காகம் இல்லா ஊரெல்லாம்
தவம் கிடக்கும் நிலை இன்று–
வாசனை ஊதுபத்திகளும்
கற்பூர ஆராதனையும் செய்து
ஆலயங்களாய் காத்த எங்கள்
இல்லிடங்கள் எல்லாம்
எறும்புகளின் புற்றுவளர்ந்து
ஓணான் உடும்பு மேயும்
பற்றைகளாய் ஆனதே......
ஒளித்துப் பதுங்கி உயிர்ப்பூ
காக்க நினைத்தாலும்
வலிந்தெடுத்து தங்கள்
விருந்துப்பொருளாக்கும் நிலை இன்று.

எமைப் பெற்ற தாய்மைகளே!
எங்கள் கதையும் உங்கள் முடிவும்....
இதை விதிக்கப்பட்டதெனச் சுமந்து
தலைமுறிந்து போவதுதான்
வரலாறாய் ஆகிடுமா?
இதைவிட பூகம்பம் எழுந்து
நாமெல்லாம் பூமிக்குள் புதைந்தாலென்ன?
விலங்கிட்டுக் கிடக்கின்றன கரங்கள்–
பொன் வளையல்கள் பூண்டதிலே
என்ன 'பவிசு' வந்தது?
வெள்ளலரி எம் முற்றத்தில்–
கூந்தலுக்கென்ன பூமுடிச்சு?
நடந்துபோவதற்கே முடியவில்லை



நமக்கெதற்கு பட்டும் வைரமும்?
போலி ஒப்பனைகள் தொலைந்து போகட்டும்
முரட்டு நம்பிக்கை அழிந்து போகட்டும்
'மனித' இருப்பு மட்டும்
நிரந்தரமாகட்டும்
'மனிதத்தின்' கைகளில் தேசம்
சிரித்து மகிழட்டும்.
சிறுசுகள் – பெரிசுகள் எல்லாம்
சுதந்திரப் போரிலே கலந்திடட்டும்
எட்டி நின்று பார்க்கும் நிலை
எதிரிக்கு வேள்விக்கடாக்களையே
உருவாக்கும்
பூக்கள் என்று இனியும்
வெந்து பொசுங்கிட வேண்டாம்
என் பிரிவால் பிரிந்த தாய்மையே...!
என் பின்னே ஒரு நீண்ட படை
திரளட்டும்.

– வதனிலா, லண்டன்.